போன் நெ. 15. விலை 2 அணா. REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 1—8—54 | இதழ் 5

"அந்தஸ்து வேண்டுமாமே!"

[வண்டு]

ஐம்பது, நூறு, ஏக்கர் நிலமிருக்கிறது; ஐயா, அடிக்கடி, பட்டணத்துக்கும் பங்களூருக்கும் போய் வருபவர்; ஆடையாபரணப் பீரோக்கள் ஐந்தாறு உண்டு வீட்டில்; கைத்தடியில் பலாகம், ஜரிகைக் குல்லாய்கள் விதம்விதம்; ஏறிச்செல்ல கார்; வருவோர் போவோரை உபசரிக்க எடுபிடிகள் ஏழெட்டுபேர்; வாரமிருமுறை விருந்து; மாளிகை வாயிலில் காவல் நாய்; அதன்கழுத்திலே வெள்ளிச் சரம்; துள்ளியோடும் குதிரைக் குட்டிகளும் உண்டு; துடுக்கடக்கும் அடியாட்களும் இருக்கின்றனர்; தும்மினால் ஓடோடிவருவர் ஊரார்; வட்டிவாசியில் வருமானம் அதிகம்; பூட்டிக்கிடக்கும் குவியல் ஏராளம்; —ஆகவே, அக்ராசனாதிபதி அவர்களே! அமர்ந்திருக்கும் சகோதர சகோதரிகளே!! நான் அழைத்து வந்திருக்கும் இவரே, நமக்கெல்லாம் தலைவர்—எளிதில் சம்மதிக்காத அவரை, எப்படியோ—சம்மதிக்கச் செய்துள்ளேன்—பெரும் பாக்யம் அவர் தலைவராகக் கிடைத்தது—இதை ஆமோதிக்கும் வகையில் எல்லோரும் ஒருமுறை கைதட்டுங்கள் என்று சபையோரை நோக்கி சண்டப்பிரசண்டம் செய்பவர் கேட்க, சபையினர் விழிக்க, தானேகரங்கொட்டிகாட்ட, அதைக் கண்ட நாலைந்துபேர் கைதட்ட, அழைக்கப்பட்டவர் ஆசனத்தில் அமர, அழைத்தவர் 'ஜே' கோஷம் போட இத்யாதி வைபவங்களுடன் அரசியல் கட்சிகள் அரும்பிய காலம் ஒன்றுண்டு! அதனை, அறியாரிரார்—அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் எண்ணிடும்போது, மடுவுக்கும் மலைக்கும் போன்ற வித்யாசம் விளங்கும்—புரியாதவரும், இரார், நமது பூமியில்.

எனினும், சிலர், கூறித்திரிகிறார்களாம்—அந்தஸ்து அற்றவர்கள் எல்லாம் அரசியலுக்கு வந்துவிட்டார்கள், என்று. அந்தஸ்து அற்றவர்கள்! அரசியலுக்கு வந்துவிட்டார்கள்!!—இருபதாம் நூற்றாண்டில், சக்கிலியின் மகன் சர்வதிகாரியாகி அகில உலகத்தையே நிலைகலக்கிய யுகத்தில், இரும்படிக்கும் ஏழையின் புத்திரன் இவ்வுலகே போற்றும் அரசியல் வாதியாகிய நாளில், இவ்வண்ணம், ஒரு பேச்சு—அதுவும் இந்த நாட்டில்!!

அந்தஸ்து அற்றவர்களாம்—அரசியலுக்கு வந்துவிட்டார்களாம். தங்கப்பூண் போட்ட தடி கையிலேயிருக்க, அமர்ந்திருக்கும் நாற்காலியிலே வெள்ளிப்பட்டை ஜொலிக்க, நெற்றியில் நீற்றுப் பட்டையும், கையில் குதிரையடிக்கும் சாட்டையும்கொண்டு, கம்பீரமாக எதிரே நிற்கும் ஏழையை ஏறெடுத்துப் பார்த்து, நிமிடத்துக்கு ஓடியும் 'ஐயோ, அப்பா' என்ற அலறலுக்கு ஐந்தடியும் எண்ணித்தரும், மிட்டாக்கள் அல்ல; மிராசுகள் அல்ல!—இவ்வண்ணம்கூறுவது! 'ஆண்டே! மெத்தகடினம்' என்று சிந்துபாடும் குடியானவச் சின்னான்களின் உரிமைக் குரல் ஒலிப்பதை அறிந்து, அவர்களுடன், ஒத்துப் போனால் நல்லதா—தட்டிக் கொடுத்தால்வேலை நடக்குமா—என்று அவர்களெல்லாம் தயங்கிக்கிடக்கும் நேரத்தில், இவ்விதம் ஒரு குரல்—அந்தஸ்து அற்றவர்களாம்! அரசியலுக்கு வருகிறார்களாம்!! ஆத்திரமும் கேலியும் கலந்து ஒலிக்கிறது—தனிப்பட்ட நண்பர்களிடம் குலவும்போது தகுதியும் திறமையும் காட்டிப் பேசிடலாம் அவ்வண்ணம் கூறுவோர்—அதற்குப்பதில் மக்கள் மன்றத்தின் முன்னின்று மார்தட்டிச் சொல்லுகிறார்கள்—அந்தஸ்து அற்றவர்களாம்! அரசியலுக்கு வருகிறார்களாம்!!

ஏளனம் கேலி, கண்டனம் சாபம்—இத்தனையும் தாண்டி, பீடுநடை போடும் மாற்றுக் கட்சியைக்காணும்போது, மனதிலே குடையும்எரிச்சல், உதடுகள் மூலம் சிதறும் உக்ரமான வார்த்தைகளாக ஓடிவருகின்றன—அந்தஸ்து, அற்றவர்களாம்! அரசியலுக்கு வருகிறார்களாம்!!

எவ்வளவு ஆத்திரம்! எத்தனை ஆவேசம்!! அரசியல், அம்சதூளிகா மஞ்சங்களுக்கு மட்டும் சொந்தமா? போகபோக்கியத்தில் திளைப்

பவர்தான், பொதுவாழ்வுக்கு லாயக்கா? என்ற கேள்வி, நாட்டில், எழும் காலம் இது. அங்காடிக்கடை அன்னம் முதல் கொண்டு, பெரிய கடை செத்தான் வரையில், அரசியலைப்பற்றிப் பேசவும், எண்ணவும் பெருவாய்ப்பு பெற்றிருக்கின்றனர். இந்தப் புதுவாழ்வு கண்டு, பூரிப்போர், பலர்.

"என்னசார், எப்படியிருக்கிறது உங்க, பாலிடிக்ஸ்?" என்று மிட்டாதார் கேட்க, "இன்னும் 'ராவ்சாகிபாகவே' யிருக்கவேண்டியிருக்கு சார்! 'சர்' ஆவது என்றோ!!" என்று சஞ்சலத்தோடு ஜமீன்தார் தெரிவிக்க, "கட்சியொன்று ஆரம்பியுங்களேன்!" என்று கனவான் கூற, அச்சு இயந்திரங்கள் சுழல, நோட்டீசுகள் தயாராக, 'நொண்டிச்சிந்து' சண்டிக் கவிராயர் தீட்டிய பெருமைகள் அடங்கிய நோட்டீசும், அதிலே இந்தச் சுந்தரரின் புகைப்படமும்பின்ன, எடுபிடிகளைக் கூட்டி தண்டோரா போடச் சொல்லி, கலெக்டரையும் கவர்னரையும் அழைத்துவந்து, கட்சித் தலைவர்களாகிய கண்ணியர்களும் இருந்திருக்கிறார்கள்! அந்தப் 'புண்ணியவான்'கள், இல்லையாம் இன்று-பொது வாழ்வு, பொது மன்றத்துக்குவந்து விட்டதாம்! புலம்புகின்றனர்—அந்தஸ்து இல்லாதவர்களாம்! அரசியலுக்கு வந்துவிட்டார்களாம்!!

அப்பன் சம்பாதித்து வைத்த சொத்தைச் சொகுசாகக் கரைக்கும் சுந்தரபுருடர்களின், உல்லாசக் கூடமாகயிருந்த அரசியல், ஓட்டை உடைசல்களின் கைக்கு வந்தது—கூடாதாம்! இவன் என்ன, மிட்டாவா! மிராசா!! இரும்புப் பெட்டியுண்டா, இவன் வீட்டில்? எப்படி அரசியல் பேசலாம்?', என்று கேட்கும் நோக்கில், அந்தஸ்தை இழுக்கிறார்கள்.

'அந்தஸ்து'க்கு அவர்கள் வைத்திருக்கும் அளவுகோல், தொண்டல்ல—பணம்; தூய உள்ளம் அல்ல—சுகபோகம்; அறிவு அல்ல—அட்டகாசம். பழைய அகராதியைப் புரட்டியபடியே பொதுமக்களைப் புதுப் பாதைக்கு அழைப்பதாக அனுதினமும் கூவுகிறார்கள். அந்தஸ்து வேண்டுமாம் அந்தஸ்து! அவர்கள் கூறுகிற அந்தஸ்து நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் இருந்திருந்தால், அரசியல் கட்சிகளுக்கென்ன வேலை? அத்தகைய அந்தஸ்து இல்லாத காரணத்தாலும், பலர் அது உழைப்பில் ஒருவன் அதனைச் சுருட்டிக்கொண்டு போவதாலும் தானே, உரிமைக் குரலும், அரசியல் கட்சியும் தேவைப்படுகிறது?

ஊரெங்கும் பணக்காரனிருந்து விட்டால்; ஏழை எப்படியிருப்பான்! மலர்க்காட்டில், சுடுகாடு தோன்ற முடியுமோ!! சாக்காட்டின் மடியில் தவிப்போருக்குத்தானே, தான் சுகமாக வாழ வேண்டுமென்கிற எண்ணமும், அதற்கிருக்கிற தளைகளை அறுத்தெறிய வேண்டும் என்கிற ஆசையும், உண்டாகும்.

அறுசுவையை உண்டு, ஜீரணிக்க சந்தனப் பூச்சுடன், இண்டிமோசு தேடி சாய்ந்து கிடக்கும் உயர்ப்பர்களுக்கு, அரசியல், ஏன்? 'வெயில்' கிளாசும், கவர்னர்கைலாகுந்தானே, அந்த அரசியல்! ஏழை அதற்காகவா அரசியலை நாடுகிறான். அல்ல, அல்ல. தன்னைச் சுரண்டி வாழும் எத்தர்களின் பிடியிலிருந்து விடுபட, எழும்பி நிற்கிறான். பேச்சில் வீரம் உருவாகிறது! விழியில் அறிவும், மொழியில் வேகமும், அரசோச்சுகிறது! அவனுடைய இதயக் கண்ணில் மாடி வீடும் மண்குடிசையும் தெரிகிறது. ஏழையின் மனம் எரிமலை ஆகிறது! அங்கே ஓர் ஆவேசம் அரும்புகிறது! அதுதான், அரசியல் அலை.

அது, சுகபோகிகளின் சுயால வாழ்வுக்கு உபயோகப்படும் வலையாக இருக்கவேண்டுமாம்—சுரண்டிப் போனவர்களின் விடுதலை முரசமாக இருக்கக் கூடாதாம் — கேலி செய்கின்றனர்! இண்டலை வீசுகின்றனர்!

அவ்வண்ணம் கூறுவோரைக் கனிவுடன் கேட்கிறோம்-ஐயன்மீர்! 'அந்தஸ்து—அந்தஸ்து' என்று ஆர்ப்பரிக்கின்றீரே. எது, அந்த அந்தஸ்து? 'என்னிடம் இருப்பது தான்' என்று மோட்டாரையும் மாளிகையையும், 'செக்' புத்தகங்களையும், சொந்தமான நிலபுலன்களையும் காட்டுகிறீரா? ஆம் எனில், இத்தனையிருந்தும், ஜரிகைக் குல்லாய்களும், ஜமீன்களும், மிட்டா மிராசுகளும், அரசியல் வாழ்வில் சோபிக்காமல்போனதேன்? ஆனால், அவர்களைப்போன்றே பணி புரிந்த நற்றொண்டர்களாம் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, நாகைமணி, மாயவரம் நடராசன், தாலமுத்து நடராசன் போன்ற ஆயிரமாயிரம் தோழர்களின் திருநாமம் இன்றும் எல்லோரது நாவிலும் தாண்டவமாடுவதேன்? நீங்கள் கூறும் 'அந்தஸ்து' இருந்திருந்தால், அழகிரி, அழிந்து செத்திருக்கமாட்டார்! அணியும் மணியும் பூண்ட அணங்குகள் பின் வர, அவரும் ஆடிப்பாடி போயிருப்பார்—இன்று போல, அவரது சமாதி, எங்களின் கண்ணீரைப் பெற்றிருக்காது! எங்கள் இதயவிளக்காகவும் ஆகியிருக்கமாட்டார்! அந்த அஞ்சா நெஞ்சனின் தோழர்கள், அந்தஸ்தைக் காட்டியா, அறிவியக்கம் கண்டனர். அல்ல! அல்ல!! அறிவைக் காட்டி—அந்தஸ்து, பேதம் காட்டும் சமுதாயச் சாக்கடையைத் தூர்ப்பதாக முரசு கொட்டி. அவர்களிடம், 'அந்தஸ்தா' இருந்தது! வீட்டில், வறுமைத் தேள்—வெளியே, எரிச்சல் நாகம்—இடையிலே, அவர்கள்.

அவ்வண்ணம், ஏழைகளும் அன்னக்காவடிகளும் கட்டித் தந்த அறிவுக் கோட்டையாம் எமது கழகத்தை, வீண்வம்புக்கு இழுக்கும் நோக்கில், ஏதேதோ பேசுவது—இழுக்கு! மாபெரும் இழுக்கு!! இதனை, உணராமல், அந்தஸ்து அற்றவர்கள்! அரசியலில் வந்துவிட்டார்கள்!! — என்று கூறுவது, காலத்தையுணராத பண்பு, இருபதாம் நூற்றாண்டை மறந்துவிட்ட மனப்பாங்கு. ஆபத்து, ஐயனே, இது ஆபத்து!

நாடு, அந்தஸ்துக்காரர்களின் வேட்டைக்காடாக இருந்தது, ஒரு காலம். மக்களின் மலர்ச் சோலையாக ஆக்கப்படவேண்டுமென்ற மன ஆவேசம் உதித்திருப்பது இந்தக் காலம்.

அன்னக் காவடிகள் அதிகம் நாட்டில்! அவர்களுக்குத்தான் நாடும் சொந்தம்!!

அந்தஸ்துக்காரர்கள் கொஞ்சம்! அவர்களை விரட்டத்தான் அரசியல்!!

அறிந்து கொள்க—சீற்றம் விடுக—சீரியபாதை செல்க, என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்! இன்றுள்ள சமுதாயம், மாக்கட்டையல்ல! மனித உணர்ச்சி நிரம்பியோர் கூடம்!! என்பதால்.

❀

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் MA

[விளக்கக் கட்டுரை — புதிய விருந்து. இப்போதுள்ள காங்கிரஸ் கட்சி தன் இலட்சியம் மக்கள் நல ஆட்சி என்று கூறிப்பெருமை பேசுகிறது.

மக்கள் நல ஆட்சி என்ற தத்துவ விளக்கத்தை, அரசியல் கட்சிகளிலே ஈடுபடாமல், ஆராய்ச்சித் துறையில் பணியாற்றிவரும், பொருளாதாரப் பேராசிரியர் தோழர் இருதயராஜ், கட்டுரை வடிவில் தீட்டி இருக்கிறார்.

நுண்ணறிவும் தெளிவும் மிகுந்தது.

அனைவரும் படித்து இன்புற வேண்டிய வகையில் அமைந்திருப்பது.

ஆட்சி முறை பற்றி அரசியல் தத்துவ விளக்கப் பேராசிரியர்கள் அளித்துள்ள அறிவுரைகளின் தொகுப்பாக, இக்கட்டுரை அமைந்துள்ளது.

தோழர் இருதயராஜ். திருச்சி, செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஆசிரியர்.]

உலக சரித்திர வரலாற்றில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு ஆட்சி முறைகள் தோன்றி மறைந்திருக்கின்றன. முடியாட்சியில் முடிதரித்த மன்னர்களும், பிரபுக்களாட்சியில் பிரபுக்களும். மக்களாட்சியில் குடிமக்களும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்திருக்கின்றனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் மக்களாட்சியின் மகத்துவமும் மேன்மையும் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, மக்களுக்காக மக்களாலேயே நடத்தப்படும் ஆட்சிக்கு மிஞ்சியது வேறில்லை என்ற எண்ணம் எங்கும் பரவியிருக்கிறது.

மக்களாட்சியில் மக்களுக்கு எவ்வளவு மோகம் பிறந்துவிட்டது என்றால், ஜனநாயகத்துக்கு வந்துவிட்டது ஆபத்து, அதைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இந்த நூற்றாண்டில் இருபத்தைந்தாண்டுகளுக்குள் இரண்டு மாபெரும் யுத்தங்கள் நடந்திருக்கின்றன.

ஆனால், கஷ்டநஷ்டங்களைப் பாராமல் காப்பாற்றப்பட வேண்டிய இலட்சியமாகக் கருதப்பட்டு வந்த குடியாட்சியின்மேல் மக்களுக்கு இருந்த மதிப்பு வர வரக் குறையத் துவங்கியிருக்கிறது. மக்களாட்சி ஏற்பட்டபின், தாமே ஆளுவதாக ஒரு திருப்தி மக்களுக்கு இருந்த போதிலும், அதன் விளைவாகத் தங்கள் நலன்கள் பெருகிவிட்டதாகவோ, குறைகளெல்லாம் தீர்ந்துவிட்டதாகவோ சொல்லுவதற்கில்லை. மக்களெல்லாம் மன்னர்களாக மாறிவிட்டபின், அவர்களுக்கு ஓட்டுரிமை கிடைத்துவிடுகிறது. ஆனால் அதன் விளைவாக ஒரு கவளமாவது அதிக உணவு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எல்லோரையும் இன்று பற்றிக்கொண்டிருக்கிறது.

ஆகவே உலகில் ஒரு புதுக்கருத்துத் தோன்றி, நாளடைவில் பரவி வருகிறது. மக்களாட்சி ஏற்பட்டுவிட்டால் மட்டும் போதாது. பெயரளவில் மக்களாட்சி இருப்பதைவிட, மக்கள் நலன்களை அபிவிருத்தி செய்யும் ஒரு ஆட்சி ஏற்பட வேண்டும், மக்களாட்சி மக்கள் நல ஆட்சியாக மாறவேண்டும் என்ற விருப்பம் வளர்ந்து வருகிறது.

மக்கள் நல ஆட்சி என்று குறிப்பிடும்போது எந்த ஆட்சியிலாவது மக்களுடைய நலன் கவனிக்கப்படாமலிருப்பதுண்டா? என்ற கேள்வி பிறக்கிறது. அப்படிப்பார்க்கும்போது கொடுங்கோலனுடைய ஆட்சியைத் தவிர, மற்றெல்லா ஆட்சிகளிலும் மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட்டுத்தான் வருகின்றன.

மக்களுடைய நலன்களே முக்கியமென்றால் இந்தியாவில் இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தபொழுது, மக்கள்நல ஆட்சியா நடந்து வந்தது? இந்தியர் பலகாலமாகக் கிடைக்கப்பெறாத வசதிகளும் நன்மைகளும் ஆங்கிலேயர் ஆட்சியில் பெறவில்லையா? ரஸ்தாக்களும், ரயில்வேக்களும், கல்விச் சாலைகளும், மருத்துவ நிலையங்களும், இன்னும் இதுபோன்ற பல பொதுநல வசதிகளும் ஓரளவுக்குச் செய்து கொடுத்ததுமல்லாமல் இந்தியாவுக்கு மிக மிகத் தேவையான வெளிநாட்டுப் பாதுகாப்பையும் உள்நாட்டு அமைதியையும் ஏற்படுத்தி, இங்கு பல நூற்றாண்டுகளாக மக்கள் அனுபவித்திராத சுகத்தையும் சுபீட்சத்தையும் ஆங்கிலேயர் அளித்திருந்தார்கள். ஆனால் இங்கே கவனிக்கவேண்டியது என்னவென்றால், இவ்வளவு நன்மைகளையும் ஆங்கிலேயர் செய்தபொழுது, ஆண்டான் அடிமையின் மேல் இரக்கப்பட்டுத் தயவாக அடிமையின் நல்வாழ்வுக்காக ஏதோ செய்வதைப் போலவும், இந்தியாவில் ரஸ்தா, ரயில்வே விஸ்தரிப்பு என்பதிலெல்லாம் 'ஆளுபவருக்கு என்ன லாபம்' என்ற கணக்கிலேயே குறியாக இருந்தார்களேயன்றி, இந்த நலன்களெல்லாம் மக்களுக்கு அவசியம் தேவை, அவைகளைப் பெறுவது மக்களின் உரிமை, அவைகளைச் செய்து தராவிட்டால் கடமையில் தவறியதாகும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்ததே இல்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் மக்களுக்கு செய்தநன்மைகள், உதாரணமாக, கல்வி வசதிகள், இலவசமருத்துவ வசதிகள், நாற்பது கோடி மக்களில் எத்தனை பேருக்குக் கிடைத்

(13-ம் பக்கம் பார்க்க)

மேதைகள்

பெரிய மனிதர்களிடம் இருக்க வேண்டிய அறிவாற்றல்கள், சின்னஞ்சிறு குழந்தைகளிடம் இருந்தால், அதிலும் அவ்வறிவாற்றல்கள் மிகமிக வியக்கத்தக்கவையாயிருந்தால் அக்குழந்தைகள் உலகில் ஒரு விந்தையாகவே விளங்கும். குழவிப் பருவத்திலேயே இத்தகைய வியக்கத்தக்க பேரறிவு படைத்து விளங்கும் குழந்தைகளைக் காண்கின்ற பலர் திகிலே அடைகின்றனர். மற்றவர்கள் மீள முடியாத வியப்புக்கு ஆளாகிவிடுகின்றனர்.

சிறு பருவத்திலேயே காணப்படும் பேரறிவு பழந் தமிழ் இலக்கியங்களில் "சிறு முதுக் குறைமை" என வழங்கப்படுகிறது. சிறு முதுக் குறைமை வாய்ந்த குழந்தைகள் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுகின்றனர். கலையிலும் அறிவியலிலும் (முக்கியமாகக் கணிதத்தில்) பிறபுனைவுத் துறைகளிலும் இக்குழந்தைகள் தம் அகவைக்கு (வயதுக்கு) அப்பாற்பட்ட அறிவு வன்மை பெற்றிருப்பது கண்டு உலகம் திகைக்கிறது. எனினும் இக்குழந்தைகளில் எல்லோருமே கட்டிளமைக் காலம்வரை வாழ்ந்து அறிவொளி பரப்புகின்றனர் என்று சொல்லமுடியாது.

ஆயிரத்தில் ஒன்று

சிறு பருவத்தில் காணப்படுகிற இந்தப் பேராற்றல் வழி வழியாகக் குடும்பத் தொடர்பிலிருந்து பிறக்கிறதென்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆயினும் இந்தப் பேரறிவு பெற்றோர்களிடமிருந்து அவர்களுடைய குழந்தைகளை யடைகிறதென்பது இதன் பொருளாகிவிடாது. இது பல தலைமுறைக்கு முந்திய மூதாதையர்களில் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாகவுமிருக்கலாம். உலகில் பிறக்கும் ஒவ்வோர் ஆயிரம் குழந்தைகளிலும் ஒரு குழந்தைதான் பேரறிவு படைத்தாக விளங்குமென அறிஞர்கள் கணிக்கின்றனர்.

இதில் மற்றோர் உண்மையும் குறிப்பிடத்தக்கதாகும். சிறு பருவத்தில் பேரறிவு படைத்தோராய் விளங்குவோர் நூற்றுக்கு 99 விழுக்காடு ஆண்களாகவே இருக்கின்றனர் என்பதுதான் அது.

7வது அகவையில் உலக வரலாறு

இனி யார் யார் இத்தகைய பேரறிவுடன் விளங்கினர் என்பதைப் பார்ப்போம், ஆங்கிலேயரான லார்டு மெக்காலே என்பவர் தமது 7வது அகவையில் சிந்தனைமிக்க உலக வரலாறு ஒன்றை எழுதினர். இதைக் கேட்ட அவருடைய பெற்றோர்கள் திடுக்கிட்டு விட்டனர். அவர் இதற்கும் குறைந்த அகவையிலேயே (வயதிலேயே) சிறுவர் தாளிகை (பத்திரிகை) ஒன்றுக்கு ஆசிரியராக இருந்தார். தமது 8-வது அகவையில் மலபாரைச் சேர்ந்த புறச்சமய மக்களைக் கிறிஸ்துவ மதத்தவர்களாக்குவதற்காகக் கிறிஸ்துவ மதம் என்ற ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதினர்.

புத்தகப் படிப்பில் அவருக்குத் தொல்லை ஏற்பட்டதேயில்லை. அவர் தமது வாழ்நாள் நெடுகலும் கற்று வந்தஎல்லாப் பொருளும்அவருக்கு மனப்பாடமாகிவிட்டன. அவர் படித்தது செய்யுளாயிருந்தாலும் சரி தாளிகை (பத்திரிகை)ச் செய்தியாயிருந்தாலும் சரி ஆராய்ச்சியாயிருந்தாலும் சரி அத்தனையும்தமது நினைவிலிருந்தே ஒரு தப்புக் கூட இல்லாமல் நன்கு ஒப்பிடுவார். அவ்வளவு தொலைவு இவற்றை மனப்பாடம் பண்ணியிருந்தார். படித்தவுடன் மட்டுமின்றி படித்துப் பல்லாண்டுகளான பின்னரும் கூட இவ்வாறு ஒப்பிப்பது அவருக்கு வழக்கமாயிருந்தது.

லார்டு பைரன்

டீன் ஸ்விப்ட் என்பார் தமக்கு 3 அகவை ஆவதற்குள்ளேயே கிறிஸ்துவ மறையாகிய விவிலிய நூலின் எந்தப் பகுதியையும் படித்துவிடக் கூடியவராய் இருந்தார். லார்டு பைரன் என்பவர் தமது 5வது அகவையிலிருந்தே ஆங்கில இலக்கியமனைத்தையும் தீரக் கற்று வந்தார். தமது பிற்கால வாழ்க்கையில் பட்டாங்கு நூல் பேரறிஞராக (தத்துவ மேதை) விளங்கிய ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர் தாய்ப்பால் குடிக்கும் குழவியாயிருந்த காலத்திலேயே புத்தகம் படிக்கத்தொடங்கியிருப்பார் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் தமக்கு 8 அகவை ஆவதற்குள் அவர் பெற்றிருந்த நூலறிவு அவ்வளவு பரந்ததாயிருந்தது. அவர் தமது 3வது அகவையிலேயே கிரேக்க மொழியைக் கற்கத் தொடங்கிவிட்டார்.

டாக்டர் ஜான்சன்

ஆங்கில இலக்கிய மேதையாகிய டாக்டர் ஜான்சன், தமது 3வது அகவையிலேயே எதையும் இலகுவாகப் படித்து வந்தார். அவர் 'குறு குறு நடந்து சிறு கை நீட்டும் தளர் நடைக்' குழந்தையாயிருந்தபோதே அவரது அன்னையார் நாள்தோறும் அவரிடம் இறை வழிபாட்டுப் புத்தகங்களைக் கொடுத்து அதில் அன்றைக்கு உரிய பகுதியைக் காட்டி, 'தம்பி, இதை நீ இன்று பாடம் பண்ணிவிடவேண்டும்' என்று சொல்லுவார். அவர் இவ்வாறு சொல்லிவிட்டு மாடிக்குச் செல்லுவார். ஆனால் அவர் இரண்டாவது மாடியை அடைவதற்கு முன்னரே ஜான்சன் அவரைப் பின் தொடர்ந்து ஓடி அம்மா, அம்மா என்று கூப்பிட்டு அந்தப் பகுதி முழுவதையும் அப்படியே தப்பில்லாமல் ஒப்பித்துவிடுவார்.

ஹென்றி பிராட்ஷா

ஹென்றி பிராட்ஷா என்பவரும் தமது 3 வது அகவையிலேயே (வயதிலேயே) எதையும்நன்றாகப்படித்து வந்தார். அவர் ஈட்டன் என்ற ஊரில் தாம் ஒரு மாணவனாகஇருந்தபோது தமது நூல் நிலையத்தில் 500-க்கு மேற்பட்ட நூல்களைவைத்திருந்தார். தாம் சிறுவனாயிருந்தபோதே சாசர், ஸ்பென்சர், டென்னிசன் ஆகியோர் உள்ளிட்ட ஆங்கிலத் தொல்லாசிரியர்களின் நூல்கள் அனைத்தையும் ஓராண்டில் கற்றுவிட்டார்.

வில்லியம் சிடிஸ்

வில்லியம் சிடிஸ் என்பவர் இவரினும் வியக்கத்தக்கவராயிருந்தார். வில்லியம் தமது 2 வது அகவையிலேயே புத்தகம் படிக்கத்தொடங்கி விட்டார். தமது 11-வது அகவையில் பேரறிஞர்களான பேராசிரியர்களின் கூட்டமொன்றில் 4-வது கன அளவு பற்றிச் சொற்பொழிவே ஆற்றிவிட்டார்! ஆனால் சிறு பருவத்தில் அவரிடம் காணப்பட்ட இந்த அறிவொளி பிற்காலத்தில் மங்கிவிட்டது. பிற்பாடு அவர் ஒரு கடையில் வாரமொன்றுக்கு 5 பவுன் சம்பளத்தில் கணக்கராக வேலை பார்த்தார். தமது 46 வது அகவையில் "பெயரில்லாப்பூச்சியாக" உயிர் துறந்தார்.

கிரீன் வுட்

ஆர்தர் கிரீன் வுட் என்ற அமெரிக்க அறிஞர் தாம் 12 மாதக் குழந்தையாயிருந்தபோதே அரிவரியைக் கற்றுக்கொண்டுவிட்டார். அவர் தமது 12 வது அகவையில் பூதநூல் மேதை (பௌதிக நூல் நிபுணர்) என்ற பட்டம் பெற்றார்.

வியத்தகு குழந்தை

ஆனால் பண்டைய இலக்கியங்களில் பேசப்படுகிற கிறிஸ்டியன் ஹெய்னெக்கர் என்ற ஜெர்மன் ஆண் குழந்தையின் வரலாறு இதைவிட வியக்கத்தக்கதாயிருக்கிறது. இது நம்பொணாததாகவேயிருக்கிறது. இக் குழந்தை 1771–ம் ஆண்டு லியூபெக் என்ற ஊரில் பிறந்தது. இந்தக் குழந்தை தான் பிறந்த சிலமணி நேரத்திற்குள்ளேயே பேசிவிட்டதென்றும் தமது 2 வது அகவையில் விவிலிய நூலைக் கரைத்துக் குடித்திருந்ததென்றும் தனது 3 வது அகவையில் லத்தீன், கிரேக்கம் பிரஞ்சு ஆகிய மொழிகளையும் பூகோளம் வரலாறு ஆகியவற்றையும் நன்கறிந்திருந்ததென்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. இக்குழந்தை, இவற்றையெல்லாம் மிஞ்சத்தக்க முறையில், தான் இறக்கப்போகும் காலத்தையும் முன்னதாகவே உணர்த்தியிருந்தது அதன்படியே தனது 4 வது அகவையில் உயிர் துறந்தது. இது பிற குழந்தைகளின் வியக்கத்தக்க நிலைமைகளையெல்லாம் தூசியாக்கிவிட்டதென்பதில் ஐயமேது?

ஜான் ரஸ்கின்

ஆங்கிலப் பெரியாராகிய ஜான் ரஸ்கின் என்பவர் தமது 5 வது அகவையிலேயே புத்தக பூச்சியாக இருந்தார். புத்தகப் படிப்பு, குழவிப் பருவத்திலேயே அவருக்கூட்டப்பட்டிருந்தது. அவர் தமக்கு 6 அகவை நிறைவதற்குள்ளேயே ஷேக்ஸ்பியர், வால்டர் ஸ்காட், பைரன் ஆகியோருடைய நூல்களையும் மற்றும் பல இலக்கியங்களையும் கற்றுவிட்டார். முன்னைய பிரிட்டிஷ் முதன் மந்திரிகளில் ஒருவரான டிஸ்ரயேலி, தமது இளம் பருவத்திலேயே ஆங்கில இலக்கியக் கடல் முழுவதையும் தமது உள்ளத்தே அடக்கிவைத்திருந்தார். அதனால் 'ஒரு நூல் நிலையத்தில் பிறந்தவர் என்ற புகழ் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

சர் வால்டர் ஸ்காட் தாம் சின்னஞ் சிறு குழந்தையாயிருந்த போதே ஷேக்ஸ்பியரின் பனுவல்கள் அனைத்தையும்சுவைக்கத்தொடங்கி விட்டார்!

இசை வல்லுநர்

இசைத் துறையிலும் இத்தகைய விந்தைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஜெர்மனியில் ஹாண்டல் என்பவர் தமக்கு 5 அகவை ஆவதற்குள்ளேயே இசைக்கருவிகளை இயக்கினார். பாட்டுகள் இயற்றிப் பெரும் புகழ் பெற்றார். மொசார்ட் என்பவர் தமது 6–வது அகவையிலேயே இசையரங்குகள் (சங்கீதக் கச்சேரி) நடத்த ஐரோப்பாவில் சுற்றுச் செலவு (பிரயாணம்) செய்யத் தொடங்கி விட்டார். ஆனால் இத்தகைய அறிவொளி விரைவில் அணைந்துவிடுகிறது என்பதற்கு இவர் நல்லஎடுத்துக்காட்டாக இருந்தார். இவர் தமது 35-வது அகவையில் உயிர் துறந்தார்.

சோப்பின், ஹேடின், ரிச்சார்டு ஸ்டிராஸ் போன்றோரும் தங்கள் குழந்தைப் பருவத்திலேயே வியக்கத்தக்க இசைப் புலமை பெற்றிருந்தனர்.

ஏகுதி மெனுஹின்

இக்காலத்தே பெரும் புகழுடன் விளங்கி வருகிற கின்னரி (பிடில்) வல்லுநரான ஏகுதி மெனுஹின் தமது 3 வது அகவையிலேயே கின்னரி இசைக்கத் தொடங்கிவிட்டார். சர் லண்டன் ரொனால்டு என்பவர் தாம் பேசக் கற்றுக்கொள்ளு முன்னரே பியானோ இசைக்கத் தொடங்கிவிட்டார்.

கணித வல்லுநர்

கணிதத் துறையில் குழந்தைகளிடம் காணப்பட்ட பேரறிவு இவையனைத்தையும்விட வியக்கத்தக்கதாக இருக்கிறது. சிலர், தாங்கள் குழந்தைகளாக இருந்தபோதே எவ்வளவு பெரிய கணக்கையும் சில நிமிடத்திற்குள் மனக்கணக்காகச் செய்து விடையளிப்பதில் பேராற்றல் படைத்தவர்களாக இருந்திருக்கின்றனர்.

ஜார்ஜ் பிடர் என்பவர் 2 அகவை நிரம்பிய குழந்தையாயிருந்தபோது அவரிடம் ஒரு கணக்கைச் சொல்லி விடை கேட்டனர். ஆண்டொன்றுக்கு $4\frac{1}{2}$ விகித வட்டியில் 4444 பவுனுக்கு 4444 நாளைக்கு வட்டி எவ்வளவு என்பதுதான் கணக்கு, ஜார்ஜ் இந்தக் கணக்கிற்கு2 நிமிடத்திற்குள் விடை சொல்லிவிட்டார்; ட்ரூமன்சாபோர்டு என்பவர் தமக்கு 9 அகவை ஆவதற்கு முன்னரே கணிதப் பேரறிஞராகிவிட்டார். அவர் 10 அகவை (வயது)ச் சிறுவனாயிருந்தபோது. அவரிடம் ஒரு கணக்கிற்கு விடை கேட்டனர். 365 என்ற எண்ணை 365–ஆல் பெருக்கி பெருக்கி வந்ததொகையை மற்றொரு முறை 365–ஆல் பெருக்கி, இப்படியே மேலும் 3 முறை ஒவ்வொரு முறையும் பெருக்கி வந்த தொகையை 365–ஆல் பெருக்க வேண்டும் என்பதுதான் கணக்கு. இதைக் கேட்ட ட்ரூமன், தமது அறை முழுதும் பம்பரம்போல் சுழன்று தாங்கொணாத வேதனைக்கு ஆளானவர் போலாகி, இறுதியில் ஒரு நிமிடத்தில் சரியான விடையைச் சொல்லிவிட்டார்.

(தமிழ்முரசு)

'இந்தியா, இந்து ராஜ்யம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறேன். அதனை, இந்துராஜ்யம் எனக் கருதுகிறவர்கள் பெரும் தவறிழைத்தவர்களாவார்கள்"

—நேரு
அஜ்மீர் ஜூலை 20.

உடைந்த உள்ளம் பேசினால்!

"நான் யார் என்று தெரிகிறதா? — காட்கில் —ஏன், அப்படிப் பார்க்கிறீர்கள்? முன்பு இந்திய சர்க்காரின் மந்திரியாக இருந்தேனே, அதே காட்கில்தான்! இப்போதுதான், ஆஜ்மீரில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறேன். 'ஏன், உங்கள் முகம் இவ்வளவு சோகமாயிருக்கிறது?' என்று கேட்கிறீர்களா? சோகம் மட்டுமல்ல, வேதனை, கோபம் எல்லாம் தாக்குகிறது, என்னை. உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறேன் — முன்பெல்லாம் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்குப் போய் வருவதென்றாலே புனிதமான காரியத்துக்குப் போய் வருவதாக எண்ணுவேன்; போவேன்; வருவேன். கூட்டத்திலிருந்து திரும்பும் என்னை வரவேற்க, என்ன முடிவுடன் திரும்புகிறேன் என்பதைக் கேட்க, காங்கிரஸ் நண்பர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி நிற்பர், ஸ்டேஷனில்! இப்போது, அவர்களில் ஒருவரைக் கூட இங்கே காணோம். ஆஜ்மீரில் நடைபெற்ற விஷயங்களை அறியும் ஆவலும் இல்லை! யாரிடம் சொல்வேன்? ஆளில்லை, பேச! ஆகவே, உங்களிடமாவது சொல்லி ஆற்றிக் கொள்ளுகிறேன்

"'ஏன் இவ்வளவு வருத்தமாகப் பேசுகிறீர்கள். ரூ. 50000 செலவாம்—அலங்காரமான பந்தலாம்—அங்கே அமைக்கப்பட்டிருந்த மின்சார ஒளியில் கண்கள் எல்லாம் பூத்துப் போயிற்றும்—ராஜோபசாரம் நடந்ததாம்' என்று கேட்கிறீர்களா. ஆமாம், நீங்கள் சொல்வது அத்தனையும் உண்மைதான்! செலவு அரைலட்சம் இருக்கும்—பண்டித நேருவைப்பற்றி வர்ணித்து எழுதப்பட்ட வார்த்தைகள் ஒரு லட்சம் இருக்கும்—மின்சார ஒளி கண்ணைப் பறித்தது—ஆனால், நாட்டுக்கு ஒளி தருவதற்காகக் கூடிய நாங்களோ, இருளில்தான் இருந்தோம்! வெளி ஒளி போதுமா? உள்ளே ஒளி மலரும் வகையே தென்படவில்லை, அங்கே! ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர் — கமிட்டி மெம்பர்கள் நாங்களும் 220 பேர் போயிருந்தோம் (மொத்த மெம்பர்களில் பாதியளவுகூட வரவில்லை)— ஆனால், என்ன பலன்? அடிக்கடி கையைத் தூக்கவும், 'ஜே!' போடவும் இருந்தோமே தவிர, எதுவும் செய்யமுடியவில்லை! எங்களையெல்லாம் பார்த்து பண்டித நேரு சொன்னார் — 'இப்படியிருந்தால் என்ன ஆவது? எல்லோரும் விவாதங்களில் கலந்துகொண்டு கருத்துக்களைக் கூறவேண்டாமா?' என்று. கூறுவதற்காகவா, அங்கே வந்திருந்தார்கள்? ஏதோ ஒரு கடமை! செச்சே

> ஆஜ்மீர் காங்கிரஸ் கமிட்டியில், சீற்றத்துக்கு ஆளான ஒரே நபர், காட்கில். உண்மையைச் சொன்னார்! உறுமுதல் கிடைத்தது!! அவர், மனந்திறந்துபேசினால்...?

...நினைக்கும்போது, என் கண்களில் நீர் வருகிறது. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமா, அது! ஏதோ ஒரு திருவிழா!! ஒளியும் ஆடம்பரமும் காட்டி நடத்தப்படும், விழா! பண்டித நேருவின் ஜோதியை வெளியுலகுக்குப் பரப்பும் விழா! வீண் விழா!!

அங்கே கூடியிருந்த எங்களுக்கு சர்க்காரின் நடவடிக்கைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமல்லவா, சர்க்காரை ஆளும் பண்டிதர். சொல்லவில்லை! மாறாக, நாங்கள் எப்படியெப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றியே போதனை செய்தார். கமிட்டிக் கூட்டத்துக்குப் போன நாங்கள் எல்லாம், விபரமறியாதவர்களல்ல! சுயராஜ்யத்துக்காக முப்பது நாற்பது ஆண்டுகளாகப் பாடுபட்டு வருபவர்கள். எங்களுக்கு, போதனைகள், புரிந்தார்— வெகுநேரம். அப்படிச் செய்யும் போது, நாங்கள் எதிர்த்தா பேச முடியும்? அதனால், வெளிநாட்டிலிருப்போர், நினைத்துக் கொள்வார்களாம் இந்த பண்டித நேரு, என்றால், எல்லோரும் அடங்கிக்கிடக்கிறார்கள். மறு வார்த்தை பேசுவதில்லை' என்று, அதற்காகவே, இப்போதெல்லாம் நேரு பண்டிதர், இப்படி புத்திமதி புராணம் தருகிறார்! தலைவேதனை!! சகித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

"பிரசங்க மாரியும், புத்திமதிப் போதனையும், பண்டிதரைப்பற்றிய பாராட்டுரைகளும் இருந்தனவேயொழிய நான் எதிர்பார்த்துச் சென்ற அம்சங்கள் எதுவும், இல்லை கமிட்டியில். எவ்வளவு நேரம் தாங்குவது? நாடு பற்றிக்கொண்டு எரிகிற நேரம்! காங்கிரசோ, செல்லாக் காசாகிவருகிறது! கவனிக்க வேண்டிய பிரச்னைகளோ ஆயிரக்கணக்கிலிருக்கின்றன! ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் — மற்றோர் பக்கம் ஆலைகளில் புயல் — கழனிகளிலோ குழப்பம். இவைகளைப்பற்றியெல்லாம், விவாதித்து, ஒரு முடிவு செய்யவேண்டும் என்ற ஆசையோடுதான் போனேன். ஆனால், கண்டதென்ன வீண் விழா! விளம்பர விழா!!

சுயராஜ்யப் போரில் ஈடுபட்ட போது நாங்கள் தராத உறுதிமொழி இல்லை — கூறாத நல்லுரை கிடையாது. 'ஏ! விவசாயத் தோழனே!! நீ கஷ்டப்படுவதற்குக் காரணம், வெள்ளையன். அவனை ஒழித்து விட்டதும் உன் வாழ்வில் சுகம் ஏற்படப்போகிறது. உன்னுடைய சொந்த நிலத்தில், நீ, பயிரிடலாம்'

"இரும்பை உருக்கிக் காய்ச்சிடு வீரே! தொழிலாளர்காள்!! ஆலை முதலாளிகளிடம் சிக்கி, அவதிப் படும் உங்களையெல்லாம் மீட்கத்தான் சுயராஜயம் கேட்கிறோம். அந்தச் சுகராஜ்யம் வந்ததும், ஏழையிருக்கமாட்டான்!! முதலாளி இருக்கமாட்டான்!! எல்லோரும் ஓர் குலம்—எல்லோரும் ஓரினம் ஒரு சில முதலாளிகளிடம் இருக்கும் ஆலைகளை எல்லாம் தேசிய மய

மாக்கி, நாட்டின் பொதுச் சொத்தாக்குவோம்'.

—"இப்படி, எவ்வளவோ, பேசியிருக்கிறோம்! உள்ளத் தூய்மையுடன், பேசியிருக்கிறோம்!! அது பற்றி, இந்தக் கமிட்டிக் கூட்டத்தில் ஆலோசிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தனர். அகமகிழ்ச்சியுடன்தான் போனேன்! இவ்வளவு நாட்களுக்குப் பிறகாவது, இதைச் செய்ய வேண்டும் என்கிற ஞாபகம் வந்ததே—என்ற ஆசையுடன்தான் போனேன்! ஆனால், பெற்றதென்ன தெரியுமோ! கடும் சொல்! சுடு வார்த்தை!!

'நாட்டின் தொழில்கள் எல்லாம் இப்போது இருப்பதுபோலவே நடந்தால் போதும்', என்றோர் தீர்மானம் கொண்டுவந்தனர் கமிட்டியில். எப்படியிருக்கும் எனக்கு? தொழில்கள் யாவையும் தேசிய உடைமையாக்குவோம் என்று சொன்ன காங்கிரசா, இன்று இப்படிச் சொல்லுகிறது? இப்போது இருப்பதுபோலவே நடக்க வேண்டுமாமே! இதைக்கேட்டபோது, என்னால் தாங்கமுடியவில்லை. எழுந்தேன்! பேசினேன்!!

'தொழில்களைத் தேசியம் ஆக்காமல், இப்படி எத்தனை நாளைக்குத் தள்ளிப்போடலாம் என்று எண்ணுகிறீர்கள்?'

'முதலாளிகளுக்கு முன்னேடும் பின்னேயாக இருப்பதுதான் இன்றைய காங்கிரசின், இலட்சியமா?'

—'என்றெல்லாம், கேட்டேன். நான் ஒருவன்தான் கேட்டேன்! உள்ளத் தூய்மையோடு கேட்டேன்!! கிடைத்த பதில் என்ன தெரியுமோ? சுடுசொல்! கடும் வார்த்தை!! முட்டாள்தனமாம்—பண்டிதர், வருணித்தார். நானும்! முட்டாளாம்!! மறந்துவிடாதீர்கள், பண்டிதரின் மந்திரி சபையிலே அங்கம் வகித்திருக்கிறேன்—நான் கூறியது, முட்டாள்தனம் நிரம்பியதாம். காங்கிரசின் பழையகால உறுதிமொழிகளை நினைவூட்டி, ஆலையாசர்களின் பிடியிலே சிக்கிக்கிடக்கும் ஆலைகளை சர்க்கார் சொத்தாக்க வேண்டுமென்பதை நினைவூட்டியது—முட்டாள்தனமாம்! எவ்வளவு, தலைகீழ்மாற்றம்? என் பேச்சைக் கேட்டு, எத்தனைபேர் பாய்ந்தார்கள் தெரியுமா, என்மீது. அவ்வளவு பேர் கூடியிருந்த கமிட்டியிலே என்னை ஆதரிக்கயாருமில்லை – ஒரே ஒரு குரல்! தனி நபராக நான்!! ஒரு காலத்திலே, ஏழைமக்களின் இயக்கம் என்று போற்றப்பட்ட காங்கிரசிலே ஏழைமக்களின் சார்பில் ஒரே ஒரு குரல்! எவ்வளவு பெரிய வெட்கக்கேடு, இது? தொழில்களைத் தேசியமயமாக்குதல் தீதாம்! அதற்குத் தரப்படும் நஷ்டஈட்டுத்தொகையைக் கொண்டு புதிதாக பல ஆலைகள் கட்டலாமாம்—ஆலைகள்தான், இன்று முக்கியமேயொழிய, அது யாரிடம் இருக்கிறது என்பதல்லவாம். பண்டிதர் கூறுகிறார். ஆலைகள் யாரிடம் இருந்தாலும் கவலையில்லையாம்! இதைக் கேட்கும்போது, உண்மையான காங்கிரஸ்காரருக்கு எப்படி இருக்கும்.

'ஆலைகளைச் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்பதைச் சொல்லும்போதே, அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் பிரச்னையே ஓடிவருகிறது, அவருக்கு! அந்த 'ஈடு' கொடுப்பதை இன்னும் ஐந்தாண்டுகளுக்குத் தள்ளிப் போட்டால், டாடா வீட்டிலும், பிர்லா மாளிகையிலும், சோற்றுக்கா திண்டாட்டம் வந்துவிடும்? சொல்கிறார், அவர்! சோகம் ஏன்?—என்று கேட்டாயே, ஏற்படாமலா இருக்கும்! நீயே சொல்!!

ஆலைப் பிரச்னையில், இப்படி—நிலப் பிரச்னையிலும் இதே பல்லவி. நிலங்களைத் திடீரென உழுபவர்களுக்கு மாற்றினால், நிலப் பிரபுக்களுக்குக் கோபம் வந்துவிடுமாம். கூறுவது, காங்கிரஸ் தலைவர்! மக்களின் அவதியைவிட, அவர்கள் கோபம், பெரிதாம். கூறுவது, காங்கிரஸ் தலைவர்! மக்களின் அவதியை விட, அவர்கள் கோபம், கண்ணை உறுத்துகிறது. காங்கிரஸ் கமிட்டியில், இதெல்லாம் நடைபெற்றது! எப்படிச் சகிக்க முடியும்?

பணக்காரர்களுக்குத் துதிபாடும் நிலையில், முன்பு கூறியதை மறந்து செல்கிறது—கட்சி. எப்படித்தாங்க முடியும்? இதனை எதிர்த்துக் கூறவோ, யாருமில்லை! எல்லோரும் பண்டிதருக்கு 'ஜே' போடத்தான் வருகிறார்கள்!! இப்படி அழிந்துகொண்டிருக்கிறது, காங்கிரஸ். அழுகை வருகிறது, நினைக்கும்போது. என்ன செய்வேன்? நீங்களே சொல்லுங்கள்—என்ன செய்வேன்?

மனம் உடைந்த,

என். வி. காட்கில் எம். பி.

'ஆஜ்மீர்' பரிசு!

காங்கிரசாருக்கு

"இது போன்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்கள் இப்போதெல்லாம் ஒரு திருவிழாபோல ஆகிவிட்டதேயொழிய யாருக்கும் சிரத்தையோ உற்சாகமோ இல்லை. நடைபெறும் விவாதங்களிலும் பலர் பங்கெடுத்து கொள்வதில்லை. உற்சாகமும் இல்லை"

*

"உங்கள் இஷ்டப்படி ஏதேதோ செய்துகொண்டிருக்கிறீர்கள். கூடியிருக்கும் நாம், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முடிவுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். உங்கள் மனம் எங்கெங்கு அலைந்து கொண்டிருந்தபோதிலும், உட்கார்ந்திருப்பதாவது தலைவரைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருக்கக் கூடாதா?"

*

"இதுபோன்ற கமிட்டிக்கூட்டங்களுக்கு வருபவர்கள் தங்கள் அந்தஸ்து ஆடம்பரங்களைக் காட்டிக் கொள்ளவே, வருகிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது, எனக்கு. அதிகாரிகளும் போலீஸ் படைகளும் புடைசூழ மந்திரிகளாயிருக்கும் காங்கிரஸ்காரர்கள் வருவதைப் பார்க்கும் சாதாரண காங்கிரஸ்காரர்கள் மனதில் எரிச்சல் ஏற்படாமலிருக்காது. ஆதலால், இனிமேலாவது, இப்படி ஆடம்பரம் காட்டாமல் நடந்து கொள்ளவேண்டும்."

*

"நாட்டில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை காங்கிரஸ்காரர்கள்கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். இது எவ்வளவு பெரிய வேதனையான விஷயம்! அவர்களுக்காவது, தெரிந்திருக்க வேண்டாமா? அப்போதுதானே, மக்கள் மத்தியில், காங்கிரஸ் செய்த நன்மைகளை எடுத்துச் சொல்லமுடியும்?"

—நேரு பண்டிதர்.

திராவிடநாடு

காஞ்சி] 1—8—54 [ஞாயிறு

உரிமைப்போரில், நாம்!

★

நீதிக்கும் நேர்மைக்கும் உலை வைக்கும் எந்த அக்கிரமத்துக்கும் தி. மு. க. தலை வணங்காது; தன்னால் முடிந்தவரையில் அதனை ஒழிக்கப் போராடும்.

அதனால்தான், அந்நிய ஆட்சியை ஒழித்துக்கட்டும் அறப் போரில், தி. மு. க. தோழர்கள், புதுச்சேரியிலும் காரையிலும் போதிய ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். 29ந் தேதியன்று அறப்போரிலீடுபட்ட 15 தி. மு. க. வீரர்களில் பலர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், சிலர் விடுவிக்கப்பட்டதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. தீரமுடன் பணிபுரியும் அத்தோழர்களை வாழ்த்துகிறோம்!

இதே நேரத்தில், குமரி முனையில் நடைபெற்று வரும் கொந்தளிப்பைப்பற்றி நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் அனுப்பிய அறிக்கையைக் கண்டு பொதுச் செயலாளரும், தோழர் மதியழகனும், நேரில் சென்றுள்ளனர், நாகர்கோயிலுக்கு. அங்கு நடைபெறும் அறப்போரைப்பற்றி, திருவாங்கூர் முதலமைச்சர், பட்டம் தாணுப் பிள்ளை, ‘எல்லைப் பிரச்னை என் கையிலா இருக்கிறது? நேருவையல்லவோ கேட்கவேண்டும்!’ என்று தெரிவித்திருக்கிறார்.

உண்மைதான்! ஆயினும், உரிமைகளைப் பெறப் போரிடும் போது, ஆளும் கட்சிக்கு சஞ்சலம் ஏற்படவே செய்யும். பண்டிதரின் கேளாக்காதைத் திருப்பும் வகையில், நடைபெறும்நோக்கம் கொண்டதுதான், திருவாங்கூர் அறப் போர்.

அதுபற்றி தி. மு. க. முன்னரே விளக்கியிருக்கிறதென்றாலும், திட்டவட்டமான முடிவு, விரைவில் தெரியும்.

எனவே, கழகத்தோழர்கள், வழக்கம்போல எதற்கும் தயாராயிருக்க வேண்டுகிறோம்! உரிமைப் போர், எங்கு நடைபெற்றாலும், அது நீதியும் நேர்மையும் கொண்டது என்றால், நாம் செலுத்த வேண்டிய காணிக்கை, எப்போதும் இருக்கிறது. ஆகலால், விழிப்புடன் இருக்க வேண்டும்—தலைமைக் கழகத்தின் கட்டளையை நிறைவேற்றி காரியமாற்ற!!

★

எவ்வாறு ஆறுதல் கூறுவது?

அறிவியக்கத் தளபதியும், ‘நம் நாடு’ பொறுப்பாசிரியராகப் பணி புரிந்து வருபவருமான, நமது காஞ்சி. கலியாணசுந்தரம் அவர்களின் ஒரே மகன் ராமு தன்னுடைய 21-வது வயதில், இளம் மனைவி பரிதவித்து நிற்க, கைக் குழந்தையொன்று கலங்க, உற்றாரும் ஊராரும் கதற, பெற்றெடுத்த தாயும் தந்தையும் துடிக்க, நம்மையெல்லாம் விடுத்து இயற்கையெய்திய செய்தியைத் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டமைக்கு மிக மிக வருந்துகிறோம்.

கழகப்பணியில் மட்டுமின்றி, நண்பர்களுடன் பழகுவதிலும், குடும்பப் பொறுப்பை நிறைவேற்றுவதிலும், குலவிளக்காகத் திகழ்ந்த அரிய செல்வனை இழந்த, நமது கலியாணசுந்தரம் அவர்களைத் தேற்றவோ, ஆறுதல்கூறவோ, யாராலும் இயலாது—செல்வனை நினைக்கும் போதும், அவன் மறைந்தான் என்பதை எண்ணிடும் வேளையிலும், நமக்கே இதயம் கலங்குகிறது. அத்தகைய ஆணழகன்! ஒரே மகன்!!—உயிரையும், பாசத்தையும் வைத்திருந்தார், செல்வன் மீது. ஊராரும், பிறரும் மனம் நோகாவகையில், புன்சிரிப்பால் பேசி, தனது இளவயதிலேயே எல்லோரது அன்பையும் பெற்ற அருமைத் தோழன், ராமு. செய்தியைக்கேட்டபோது, திகைத்தோம்! குழம்பினோம்!! யாருமே எதிர்பார்க்காத, சாவு—‘டைபாய்டு’ காய்ச்சலாம்! அது, அந்த அருங்காளையைப் பலி கொண்டுவிட்டது. இளம் மனைவி! கைக்குழந்தை! தாய்! தமக்கை! — அந்தக் குடும்பத்துக்கே, ராமுதான், நம்பிக்கை நட்சத்திரம் சாவுப்புழுதி, அந்த அரிய மலரை அடித்துக் கொண்டு போய் விட்டது. சாதாரணமான சாவு அல்ல! அதுவும் நமது கலியாணசுந்தரம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழப்பு, எனவே, கோரமாயிருப்பது!! அழுது தேம்பும் அருமை நண்பராம் அவருக்கு, எந்த ஆறுதலைக் கூறுவது, நாம்? கால ஓட்டத்தைக் காட்டுவதா! சாவின் விசித்திரத்தைப் பற்றிச் சொல்வதா! — தத்தளிக்கிறோம். அருமை வீரனொருவனை இழந்த ஆற்றொணாத்துயரில் மிதக்கிறோம். ஐயோ, சாவே! உன் ஆத்திர ஆசைக்கு ராமுவா, பலியாக வேண்டும்?

★

“ஏன், ஓய்! என்னென்னமோ, சொல்வீரே—நேற்று, அவா, பேசினதைக் கேட்டீரோ—அக்கிரமமா ஒண்ணும் தோணலியே, ஓய், நேக்கு!”

“எனக்கும் தான், ஓய்! நேற்று வரையிலே நானும் நம்ம சீனு பேச்சை நம்பிட்டு, ஏதேதோ எண்ணிண்டிருந்தேன். நல்ல பசங்க தான!”

“அதென்ன அப்படி இழுத்தாற் போலச் சொல்றீர்? நல்ல பசங்களா இல்லாட்டா, நாலஞ்சு வருஷத்திலே, இவ்வளவு பெரிய கட்சியை கட்டிக் காத்திருக்க முடியுமோ? நல்ல பசங்கமட்டுமில்லே ஓய் — நாலும் கற்ற பசங்க, விஷயங்களைத் தெளிவா, திட்சண்யமா, புரிஞ்சுகிட்டிருக்கிற பசங்க......”

“அதோட, அவன்கையிலே யிருக்கிற சரக்கும், சாதாரணமானதல்லே, ஓய்! சரமாரியா கொட்டிறான்கன்னா, சரக்கு இருக்கு—அதுவும் விலைபோகிற சரக்கு.....,”

"சரக்குஇருந்துட்டா போதுமா ஓய்! அதை எல்லோருக்கும் தரணும், எல்லோருடனும் வாழணும்கிற, நல்லெண்ணமும் இருக்கு!"

"இத்தனை நாளும், இதைத் தெரிஞ்சுக்காமெ, நீரும் நானும் என்னென்ன பேசினோம்—"

"பேசினோமா—அவா பாஷைப்படி — ஏசினோம், ஓய், ஏசினோம்! அந்தக் கட்சிக்காரபசங்களைவே, எவ்வளவு எரிச்சல் வந்தது தெரியுமோ, நேக்கு"

"நேக்கும்தான்! தினசரி, நானும் சீனுவும் அந்தப் பசங்களைப்பற்றி, ஒரு அரைமணிநேரமாவது திட்டாமல், இருந்ததில்லே, இந்தத்திண்ணையில்!"

"சீனுன்னு, யாரு, ஓய்?"

"அதான்! 'இந்து' ஆபீசிலேயிருக்கானே, அவன்தான்..."

"அவனும் நேற்று கேட்டானோ, அவா, பேசினதை!"

"கேட்டானா? ஆனந்தப்பட்டான்! இவ்வளவு நல்லவாளா, இவா—நேக்குத் தெரியாமப் போச்சே — பத்திரிகை ஆபீசிலேயிருந்து பிரயோஜனம் என்ன — அப்படி இப்படீன்னு பெருமூச்சு விட்டான்!"

"நேக்கு, இந்தக் கழகம்னா, நேற்று வரையில் மனசிலே என்ன எண்ணம் தெரியுமோ? ஓய்...! நீர், கிண்டல் பண்ணாமலிருக்கிறீரா?... என்ன நினைச்சேன்கிறதை சொல்றேன்!"

"சொல்லும்!"

"நினைச்சுப்பார்க்கக்கூட இலாயக்கில்லாதவன்கன்னு, நேக்கு ஒரு வெறுப்பு — அதனாலே, இந்தப் பசங்க எழுதிற சினிமாப்படங்களை கூடப் போய்ப்பார்க்கிறதில்லே—நோக்குத்தான் தெரியுமே, ஓய்! எவ்வளவு சினிமா பைத்யம் நேக்கு, உண்டு — ஆனாலும், போறதில்லே ...அப்படி ஒரு வெறுப்பு!"

"அது இப்போ, போயிட்டுதுன்னு சொல்லும்"

"போகாமெ இருக்குமா, மனசைக் குடைஞ்சுண்டிருந்த ஒரு பீதியும் அல்லவா, ஓய், இப்போது போய்விட்டது..."

"அதென்ன, ஓய், பீதி?"

"எங்கே நம்மளவாளையெல்லாம் ஒரு நாளைக்கு விரட்டிடுவாளோ! எங்கே பார்த்தாலும் கழகம்—கழகம்—ன்னே பேசறாளே! ஒரு நாளைக்கு, குழந்தை குட்டி குடும்பத்துக்கெல்லாம் ஆபத்து வந்திடுமோ — அப்படீன்னு, என் மனசிலே ஒரு திகில், எப்பவும். அது, நேற்றோடெ, தீர்ந்தது!"

"நேக்கும் அதே, நிலைதான். நல்லவேளை! நேற்று, அவங்க கூட்டத்தைக் கேட்கும், சந்தர்ப்பம் கிடைச்சது..."

"ஓய்! இனிமே, அவங்க என்று, சொல்லாதேயும்...... அப்படி, பிரிச்சுப் பேசறதாலேதான், உயர்வு தாழ்வு வளருதுன்னு, கழகத்தார் சொல்லலே!"

"ஆமாம்! ஆமாம்!! பழக்கவாசனை —இனிமே, திருத்திக்கணும்"

"இவ்வளவு நல்ல மனசோடெ, தெளிவான விஷயங்களை, நாடு முன்னேற வேண்டும் என்கிற ஆசையோடு, பேசறாளே — இவா, பேச்சை, நம்ப பத்திரிகையெல்லாம் எடுத்துப்போட்டா நாம்ப எல்லாம் வீணு பீதி அடைஞ்சுண்டு. துவேஷத்தை வளர்த்துண்டு. இருப்போமா? ஏன், பத்திரிகைக்காரா, செய்யமாட்டேங்கிறா!"

'நேக்கும், அதான் புரியலே! இவ்வளவு பெரிய கூட்டம், இந்த மைலாப்பூரிலே நடந்ததே, ஒரு வரிகூட இல்லே, 'இந்து'விலே..."

"சீனு, 'இந்து' ஆபீசிலேயிருக்கான்னீரே!"

"ஆமாப்! அவனும், கூட்டத்தை 'ரிபோர்ட்டு' எடுத்துண்டுதான் போனான்..."

"ஏன், போடலே!"

"பத்திரிகை நடத்துறாளே, அவாளுக்கு இந்த 'நியூசெல்லாம்' பிடிக்கலையாம்—ஏன், நீ அங்கே போனேன்னுகூட, சீனுவைக் கேட்டாளாம்!"

"பத்திரிகைகளிலேயே பாரபட்சமில்லாத பத்திரிகைன்னு இந்துவைப் பற்றி சொல்றாளே, எல்லாரும்!"

"ஆமாம்! அதனாலே......"

"ஓய்! நம்மையெல்லாம் இப்படி இருட்டிலே இருக்கும்படி வைச்சு, நமக்கும் இந்தக் கழகத்துக்கு மிடையிலே தொடர்பு இல்லாமச் செய்ய, இந்தப் பத்திரிகைகாரங்கதான், காரணம்னு தெரியுது. நீர் என்ன சொல்றீர்?"

"சந்தேகமா, அதாலே! ஆனா, இப்படிச் செய்றதுக்கு ஏதோ, காரணம் இருக்கும்"

"என்ன காரணமாயிருக்கும்?"

"அதான் யோசிக்கிறேன்!"

"நீர் யோசியும்—நான் 'லஸ்' வரையிலும்போய், 'நம் நாடு' பத்திரிகை வந்துட்டுதான்னு பார்த்துட்டு வர்றேன்!"

[சென்னை மயிலையில், 25ந் தேதியன்று நடைபெற்ற தி. மு. க. கூட்டம், முக்கியமானதாகும். அன்று பேசிய பொதுச்செயலாளர், பார்ப்பனகுலத்தினருக்கு விடுத்தசெய்தி, மிகமிகக் குறிப்பிடக்கூடியதாகும். அந்தக் கூட்டத்துக்குப் பிறகு, பல திண்ணைகளில், இப்படிப்பட்ட உரையாடல்கள் இருந்திருக்கலாம்! —கூட்டத்தில் பேசியதை, அவர்கள் யாவரும், வெறுப்பு துவேஷமின்றி, புரிந்துகொண்டிருந்தால்!]

★

நவரத்ன சால்வை!

நாற்பத்தைந்து வகையான 18,000 நவரத்ன கற்கள் இழைக்கப்பட்ட ஒரு அற்புதமான சால்வை, (போர்வை) உத்தரபிரதேசத்தில் தயாரிக்கப்பட்டு அமெரிக்காவில் நடைபெறும் கண்காட்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிகுந்த வேலைப்பாடுள்ள இந்த அற்புதமான போர்வையை 30 கைநெசவு நிபுணர்களான தொழிலாளிகள் 18 மாதகாலமாகத் தயாரித்து முடித்தனர். படுக்கையின் மீது விரிப்பாகப் போடக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தச் சால்வையில், தாஜ்மஹாலில் காணப்படும் அலங்காரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விலை 12,50,000 ரூபாய்!

❀

[சிறுகதை]

உலகம் யாருக்கு?

[அண்ணல்]

"உத்தமன், சிந்தனைச் சிற்பி ஊருக்கு! மல்லி வீட்டாருக்கோ, நான் ஒரு ஓட்டை உடைசல்! நேற்று நடைபெற்ற இலக்கிய மன்றக் கூட்டத்தில் என்னை அறிமுகம் செய்து வைத்த பேராசிரியர், 'சிந்தனை சிற்பி' என்று புகழ்ந்தார். புகழும் அறிவும், புசிக்க வழி காட்டுமோ—என்கிறார், மல்லியின் அப்பா. உண்மைதான், என்று உணர்கிறேன். தன்னுடைய மகளை, அன்ன ஆகாரக் கஷ்டமின்றி வாழச் செய்ய விரும்புகிறார், அவர். நானோ, அதற்கு வழியற்றவன்! நிரந்தர வருவாயற்ற நிலையிலே இருப்பவன்! என்னிடம், பணத்தை, எதிர்பார்க்கிறார், அவர். நானோ, அறிவையும் புகழையும் காட்டுகிறேன்!!

"பிச்சைக்காரன் கூட சோற்றைத்தான் எதிர்பார்ப்பானேயொழிய, அறிவையல்ல — தம்பி!", என்று சொல்லாமல் சொல்லுகிறார். அவர் கூறுவதிலும் உண்மையில்லாமலில்லை! அதற்காக மல்லியை மறந்து விடலாம் என்றாலும் முடியவில்லை!!

"கண்ணா!" — என்று அவள் ஆசையோடு, என்னை அழைக்க,

'என்னா!'—என்று கிண்டலோடு, நான் கேட்க,

'போதும், உங்கள் கேலி!'—என்று அவள் கோபிக்க,

'இந்த மலர்த்தோட்டத்துக்கு நான் தானே வேலி!'—என்று நெருங்க,

'பயிரை மறந்து விடமாட்டீர்களே!' என்று என் தோளில் சாய,

'உயிரை மறந்து வாழ முடியுமா, என்னால்!', என்று அவள் மடியில் சாய,

இப்படி எந்தவித காதல் விளையாட்டுக்கூட ஆடியதில்லை, நான். சொன்னால், நம்பமாட்டாய்! நாடகங்களுக்கு காதல் சீன் எழுத வேண்டுமென்றால், மல்லியைக் கதாநாயகியாக வைத்துக்கொண்டு, நான் கதாநாயகன் ஆகி, வசனத்தைப் பொழிந்து தள்ளுவேன், காகிதத்தில்! கண்டபலன் அது தானே ஒழிய, மல்லியிடம் இன்றுவரை, ஒரு சொல் கூடப் பேசியதில்லை. மாமன் மகள் தான், எனக்கு!!

மயிலூர் பண்ணையார், மல்லியைக் கேட்கிறாராம். 'மாமாவோ, ஆயிரமாவது உண்டா, உன்னிடம்?' என்கிறார். எங்கேடா போவேன்! என்னடா செய்வேன்!!"

*

புல்லும் புலம்பும்! — அவ்வளவு வேதனையோடு, தன் சோக நிலையைச் சொன்னான், சூளாமணி— என்னுடைய நண்பன், அவனுடைய பெயரைக் கேட்டாலே, பலர், ஆகா! — என்பர். அவ்வளவு பெரிய வீரன்—மேடையில்! அவனுடைய எழுத்தைப் படிப்போரோ என்ன அறிவு! என்பர். அவ்வளவு பெரிய, எழுத்தாளன். எங்கள் மத்தியில் அவன் ஒரு மாணிக்கம்! உங்களிடம் சொன்னால், என்ன? அவனுடைய நண்பன்—என்று சொல்லிக்கொள்வதிலே, எனக்குக்கூட பெருமையாயிருப்பதுண்டு. அவன், இப்படிச் சொல்லுகிறான்! மல்லியைக் கொடுக்க மாமா தயங்குகிறாராம்! அவர் தயங்குவதும் தவறில்லை — என்பதை என் சூளாவும் அறியாமலில்லை. ஊருலகம் போற்றினாலும், சொந்த வீடுகூட இன்றி, வாடகை அறையில், வருமானம் என்றால் இன்னதென அறியாது கிடக்கும் எவனுக்குத்தான் பெண்ணைக் கொடுக்க முன்வருவார்கள்? அதிலும், அவர், ஒரு ஏழை! இதுவரை பட்டினியிலும் பாதவிப்பிலும் கிடந்த பெண், புகும் இடத்திலாவது கொஞ்சம் சந்தோஷமாகயிருக்கவேண்டுமென்றுதானே எந்தத் தந்தையும் எதிர்பார்ப்பார். தேள் குழியிலிருந்து பாம்புக்குழிக்குப் பாய்வதை மனிதன் எதிர்பார்ப்பானா? காதல்! காதல்!!—என்றெல்லாம், சொல்வார்கள். அது போயிற் சாதல்! சாதல்!!—என்றும் தீட்டுவார்கள். இப்படிச் சொல்வதால், ஒரு 'தேவதாஸ்' நாவலையும் 'லைலாமஜனு' இலக்கியத்தையும் உருவாக்கிக் காட்டலாமேயொழிய, வாழ்க்கையில் முடியுமா? என்ன செய்வது! ஆயிரம் இருந்தால், போதுமாம் கலியாணத்துக்கு நூறு இருநூறு போக — மீதியைக் கொண்டு ஏதோ ஒரு தொழில் செய்வதாகச் சொல்லி, மல்லியை மணமுடிக்க முடியுமாம்!! என் கண்பனைப்போல என்னிடமும் அறிவு இருக்கிறதேயொழிய, 'அது' இல்லை. என்ன செய்வேன்? நாள் முழுதும் தூரிகையும் வர்ணமுமாக சித்திரங்களைத் தீட்டுபவன், நான். என் படங்ள் 'டில்லி' வரையில் கூடப்போய், பாராட்டுதலைப் பெற்றிருக்கின்றன. பலன்!! எப்போதும் போல், எதிர்க்கடை 'டீ'யும், மூலைக்கடைச் 'சோறு'ம்தான் எனக்கும், கதி. இந்நிலையில், என்ன செய்வேன் நான்? மல்லியைப்போல் அழகான படம் வேண்டுமென்று கேட்டால், நூறென்ன, ஆயிரம் கூடத் தீட்டித் தந்துவிடுவேன்! அவன் ஓவியத்தைக் கேட்கவில்லையே — உயிரோவியத்தையல்லவா கேட்கிறான்!! அதற்கு, பணம் அல்லவா, வேண்டுமாம்—பணம். இந்தப் பாழும் பணத்துக்கும் அறிவுக்கும் பரம்பரை விரோதமாம்! சரஸ்வதி இருந்தால் லட்சுமி இருக்க மாட்டாளாம்!! என்ன சண்டை வந்ததோ, அவர்களுக்கு? இந்தப் புராணிகர்கள் சொன்னாலும் தேவலாம்."

*

கண்ணீர் வரும்போலிருந்தது எனக்கு! ஏட்டுக்கு ஒரு சித்திரம் எழுதி வாங்குவதற்காகப் போயிருந்தேன் ஓவியர் 'உண்மையிடம். அவருக்கு நேரமில்லை, புதிதாக ஒன்றை எழுதித் தர! அங்கிருந்த சித்திரம் ஒன்றைக் காட்டி இதைப் போட்டு விடுங்களேன் என்றார். அந்த ஓவியம், மிகவும் அழகாயிருந்தது!

நீலநிற வானத்திலே ஒரு நிலவு.

பூமியிலே உள்ள ஒரு செடியில் ஒரு அழகான பட்டுப் பூச்சி.

அந்தப் பூச்சி, தன் இறக்கைகளை விரித்துக்கொண்டு, நிலவை முத்தமிட முயல்வதுபோல இருந்தது.

கற்பனை அபாரம்! ஆனால், 'இந்தப் படத்தைப் போட்டு என்ன எழுதுவது' என்றேன், ஓவியரிடம்.

'விளக்கமென்ன சார்! ஒரு கதையே எழுதலாம்' என்று சொல்லிக்கொண்டு பெருமூச்சோடு ஆரம்பித்தார். கதை என்றதும், தயாரானேன்! அவர் கூறியதுதான் மேலேயிருப்பதும் நீங்கள் படிக்கப் போவதும்.

*

"இன்னும் ஏழு நாள் தவணை கொடுத்திருக்கிறார், மாமா"—என்று சொல்லிக்கொண்டே வந்தான், என்னிடம். 'யாரையாவது கேட்டால் என்ன சூளா?' என்றேன். அனைவரும் அவனைப் புகழவும், அவனுக்கும் தமக்குமுள்ள அன்பைக் காட்டிக் கொள்ளவும் தயாராகயிருந்தனரே ஒழிய, ஒருவரும் முன்வரவில்லையாம், உதவிசெய்ய. வெறுப்போடு வந்தான்!! நானோ ஒரு அவசரமான வேலையில் ஈடுபட்டிருந்தேன். வந்த சூளா, நான் தீட்டிக்கொண்டிருந்த ஓவியத்தைக் கண்டதும், உற்றுப் பார்த்தான். பிரமாதம்—என்று சொன்னான். அது ஒரு பிச்சைக்காரன் படம்! குழி விழுந்த கண்கள், கந்தலாடை, கையில் ஓடு—இப்படித் தீட்டியிருந்தேன். வெகு அழகாக இருக்கிறது! அப்படியே பிச்சைக்காரனை அழைத்து வந்தது போலிருக்கிறது!!—என்று வாய்விட்டுச் சொன்னான்.

"சரி! சூளா!! இந்தப் படம் எப்படி?", என்று அதே பிச்சைக்காரனைப் போலிருந்த இன்னொரு உருவத்தையும் காட்டினேன்.

"ஏய்! இந்தப்படம் எழுதுவதற்காக இந்தப் பிச்சைக்காரனை எங்கேடா பிடித்து வந்தாய்?", என்று கேட்டான்.

சில வேளைகளில் நான் அப்படிச் செய்வது வழக்கம்! அன்றும் ஒரு பிச்சைக்காரனை அருகில் வைத்துக் கொண்டுதான் அந்த ஓவியத்தைத் தீட்டிக் கொண்டிருந்தேன்.

"ஏய்! எவ்வளவு நேரமாக இந்தப் பிச்சைக்காரன் உட்கார்ந்திருக்கிறான்?"

"ஒரு மணி நேரமாக!"

"கூலி கொடுப்பாயா?"

"கொடுக்காமல் முடியுமா?"

"எவ்வளவு கொடுப்பாய்!"

"ஒரு நாலணா!"

"இந்தப்படத்தை நீ, என்ன விலைக்கு விற்பாய்?"

"ஐந்து ரூபாய்க்கு!"

"நன்றாயிருக்கடா! படத்துக்கு ஐந்து ரூபாய்—உண்மையான உருவத்துக்கு நாலணா!"

எங்கள் பேச்சு, எங்கேபோயிருக்குமோ! அதற்குள் யாரோ, என்னைக் கூப்பிடவே, வெளியில் போனேன். நான் போனபிறகு, அந்தப் பிச்சைக்காரனிடம் அவன் போயிருக்கிறான். நானில்லாததால் பிச்சைக்காரனும் கொஞ்சம் நிம்மதியாக கைகால்களை ஆட்டிக்கொண்டு இருந்திருக்கிறான்! நாலணாவுக்காக அந்த ஆள் அனுபவிக்கும் சிரமத்தைக் கண்ட என் சூளாவின் மனம் உருகாமலாயிருக்கும்? ஏழையாயிற்றே! ஏழைகளுக்குத்தானே, இரக்கப்படும் சுபாவம் இருக்கிறது!! தன்னுடைய பையைத்தடவி! அதில் கிடந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து, அந்தப் பிச்சைக்காரனின் ஓட்டில் போட்டுவிட்டு, நான் வருமுன்னரே, அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். அன்றிரவு, சூளாவை, வழக்கமாகச் சந்திக்கும் 'டீ'க்கடையில் பார்த்தேன்.

"படம், முடிந்துவிட்டதா?"

"முடிந்து சட்டம்போட்டு அனுப்பி விட்டேன்"

"அந்தப் பிச்சைக்காரன்...?"

"அவனும் போய்விட்டான் சூளா! நீ, வந்தபிறகு உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவனிடம் சொல்லவேண்டியிருந்தது—எனக்கு!!".

"அடப்பாவி! அவன் என் வீடு தேடிவந்தால், அவனுக்குக் கொடுக்கக்கூட என்னிடம் எதுவுமில்லையே!!"

"அவன் கட்டியிருந்த துணி, எப்படியிருந்தது—பார்த்தாயா? அசல் கந்தல் துணியாக இல்லை?"

"ஆமாம்! அவன் என்னிடம் வந்தால், அதைவிட மோசமான துணிதானே இருக்கிறது—என்னிடம்"

"அடடே! இது தெரிந்திருந்தால் அவன் உனக்கு நூறு ரூபாய்கொடுத்திருப்பானே! காலையில், ஒரு கந்தல் துணிக்காக, எங்கெல்லாம் அலைந்தோம்?".

"என்ன?"

"ஆமாம் அசல் பிச்சைக்காரன் போல இருக்கவேண்டும் என்பதுதான் அவனுக்கு ஆசை எனக்கும் அதுதான் ஆசை அதற்காகத்தான் அலைந்தோம். பிச்சைக்காரன் படம் தீட்டி, பீதாம்பரத்தைப்போல ஆடை அணிந்திருப்பதாக எழுதினால், பார்க்க நன்றாயிருக்குமா? அதனால்தான் கந்தல் ஆடைக்கு அலைந்தோம்!"

"நீ சொல்வது புரியவில்லையே எனக்கு!"

"உனக்குப் புரியாது—நீ கந்தை என்று சொன்னாயே, அது இருப்பதுதான் என் ஓவியத்துக்கு உயிர்! நீ பரிதாபம் என்று கூறினாயே—அவனைப் பார்க்கும்போது, அதுதான் என் சித்திரத்துக்கு ஜீவன்"

"உன் இருதயம்என்ன இரும்பா? நடமாடும் பிச்சைக்காரர்கள் நாடு முழுமையும் இருக்கும்போது, அந்த உயிருள்ள படங்களை விற்றால் கூட வாங்க முன்வர மறுக்கிறார்கள். உயிரில்லாத படம் உண்மையாக இருக்கவேண்டுமென்பதற்காக அலைந்தோம் என்கிறாயே! உனக்கு இருதயமே இல்லையாடா?"

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போது அவனைக் கேட்டேன். "என் இருதய விசாரணை இருக்கட்டும்! உன் இருதயவல்லி எப்படி இருக்கிறாள்?"

"ஏன்? அந்த விஷயத்தைப்பற்றியும் பிச்சைக்காரனிடம் சொல்லியிருக்கிறாயோ?"

"ஆமாம்! ரூபாய் ஆயிரம் தேவைப்படும் விஷயத்தையும் சொல்லியிருக்கிறேன்..."

"அந்த மகாப் பிரபு கொண்டு வந்து கொடுப்பார்—என்று கூறினாயாக்கும்!!"

"தீச்சுடர்"
வார இதழ்
[ஆசிரியர்: சி. பி. சிற்றரசு]
ஆகஸ்டு முதல் வாரமுதல் 16-பக்கங்களில் வருகிறது. விலை, 2-அணாதான்.
நிர்வாகி
'தீச்சுடர்'
தெப்பக்குளம் திருச்சி.

"ஆமாம்!"

"என்ன ஆமாம்?" என்றான் சூளா, கோபமாக. நான் உண்மையைச் சொன்னேன்.

"சூளா! பிச்சைக்காரனாகயிருந்தவன், உண்மையில் ஒரு பிச்சைக்காரனல்ல. இந்தப் பக்கத்திலேயே ஒரு பெரியபணக்காரன். அவனுக்கு விரைவில் ஒரு புது மனைவி வரப்போகிறாளாம்! அவளுக்குக் காட்டி ரசிப்பதற்காகவே, அப்படியொரு படம் எழுதச் சொன்னான்!"

"அப்படியா?"

"ஐயோ! அவன்மீது பரிதாபப்பட்டு கையிலிருந்த ஒரு ரூபாயையும் கொடுத்துவிட்டேனே!"

"இனி திரும்பிவராது!" என்று சிரித்தேன், நான். சூளாவுக்கு, வேதனை! உலகில், எதை நம்புவதென்றே, தெரியவில்லை—என்றான். உண்மை ஏழையாயிருப்பவன் ஒரு நாளைக்காவது சந்தோஷமாயிருக்க முடியாதா என்று நினைக்கிறான்! பணக்காரன், தன்னை ஏழை உடையிலே பார்க்க ஆசைப்படுகிறான்!!—என்றான், வேதனையோடு.

*

ஓவியர் 'உண்மை' கதையை எங்கோ ஆரம்பித்து எங்கோ போகிறாரே, என்று எண்ணினேன். நண்பனின் காதலில் ஆரம்பித்து பணக்காரன் விஷயத்துக்குப்போய் விட்டீரே — என்றேன். 'எதைத் தொட்டாலும் அதில்தானே சார் போய் முடிகிறது!' என்று கூறிவிட்டு ஆரம்பித்தார், அவர்.

*

பிச்சைக்காரன் உருவிலிருந்தவனிடம் தன் சொந்த விஷயத்தைச் சொன்னதற்காக என்னிடம் சூளா, சீறினானல்லவா? ஆனால், அந்தப் பணக்காரன், சூளாவின் செய்தியைக் கேட்டதும் மிகவும் பரிதாபப்பட்டான். ஊருக்குப் போனதும். ஒரு ஆயிரரூபாய் அனுப்புவதாக, உறுதிகூறிச் சென்றான். அந்த நம்பிக்கையில், நாள் ஏழையும் ஓட்டிவிட்டேன்! நாளைக்காலை, மல்லிக்கும் மயிலூரானுக்கும் திருமணம்! நானே துடித்தேன்! சூளாவோ பித்தனைப்போல இருந்தான்!! பேசாமலிருடா! எப்படியாவது போய் அவரிடம் பணம் வாங்கிவருகிறேன்' என்றேன் 'எந்த ஊருக்கு?' என்றான். அந்தப் பணக்காரன் தந்த முகவரியைக் காண்பித்தேன்! திகைத்தான், நண்பன்! ஒரு பெருமூச்சுவிட்டான்! பேசாமல் எழுந்துபோய்விட்டான்!!

இரவு நெடுநேரம் ஆகியும் என்னை நாடிவாராத சூளாவைத் தேடிக்கொண்டு, அவன் அறைக்கு போனேன் — அந்த, இலக்கிய மேதை — அறிவுப் பொக்கிஷம், தலைகுனிந்தவாறு கிடந்தான்! தூக்கத்தின் விளைவுபோலும்!', என்றெண்ணியபடி போய்த்தொட்டேன். திடுக்கிட்டேன்! அவன், பிணமாகி விட்டான்!! அவன் உயிர், அருகில் காலியாகிக் கிடந்த விஷச் சீசாவால், போயிருக்கிறது. 'ஐயோ, நண்பா!', என்று அலறினேன் — அழுதேன் — விடிந்தது. அவன் மாமா வீட்டிலிருந்து, மேளச் சப்தம் கேட்டது! மணமகள், போய்க்கொண்டிருந்தாள்!! நானும் தோழர்களும், எங்கள் தோழனின் பிணத்தைச் சுமந்து போய்க்கொண்டிருந்தோம்.

சுடுகாட்டிலிருந்து வேதனையுடன் திரும்பிய எனக்கு, இரண்டு கடிதங்கள், காத்துக்கிடந்தன. ஒன்றில்' அந்தப் பணக்காரர், அனுப்பிய ஆயிரம் ரூபாய் 'செக்'கும் தாமதத்துக்கு வருந்தியும் கடிதம் இருந்தது! இன்னொரு கடிதத்தைப் பிரித்தேன்—அதில், சாகுமுன் என் சூளா தீட்டிய கடிதம் இருந்தது.

"தோழா! உலகம் விசித்திரமானது. உன் இதயச் சித்திரத்தில், என்னை ஒரு பெரிய மேதை என்று நீ தீட்டிவைத்திருப்பது எனக்குத் தெரியும். அந்த மேதை இதோ சாகப் போகிறான், பிச்சைக்காரன் என்பதால்! யாரோ ஒருவனை உன் ஓவியத திறமையால், பிச்சைக்காரனாகத் தீட்டி அவனிடமிருந்து ரூபாய் ஆயிரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாய். அவன் யாருமல்ல! நீ காட்டிய முகவரியிலிருந்து தெரிந்துகொண்டேன்—அவன்தான் மல்லியை மணக்கப் போகும் மயிலூரான்!! நண்பா, தூரிகை பிடித்தால், ஆகாயத்து நிலவு, வர்ணச் சீலைக்கு வந்துவிடுகிறது உனக்கு. பேனாவைப் பிடித்தால், நிலவிடம் இல்லாத வர்ணனைகளையெல்லாம் கொட்டிவிடுகிறேன், எழுத்தில். ஆனால் இந்த உலகில் கற்பனையைக் கரைத்துக் குடித்து வாழ முடியாது! பட்டுப்பூச்சி அழகாக இருக்கிறது என்பதால், நிலவிடம் யாரும் கொண்டுபோய் விடமாட்டார்கள்!! பறந்து செல்ல அதற்கு சக்தி வேண்டும். மல்லி—எனக்கு நிலவு. பறந்து போக பண இறகு இல்லை! அந்த இறகு இருக்க வேண்டும், இல்லையேல் அது இல்லாமலே வாழக்கூடிய நாள் வர வேண்டும் அது வரையில் இந்த உலகில், நம்போன்ற ஏழைகளுக்கு நிரந்தரமான சுகம் அளிப்பது—சாவு ஒன்றுதான். சஞ்சலப்படாதே வருகிறேன்" என்று முடித்திருந்தது.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன்! பக்கத்தில் கிடந்த 'ஆயிரம் ரூபாய் செக்' என்னைப் பார்த்து சிரிப்பதுபோலிருந்தது!!

★

★ தென்றல் ★

கடந்த ஆறுவாரகாலமாக மறுமலர்ச்சிச் சோலையில் மிதந்திடும் 'தென்றலை' நாட்டோரைப் போலவே நாமும் ரசித்துவருகிறோம். தன்னுடைய நீண்ட நாளைய அனுபவங்களையும், கவிதை உள்ளத்தையும், தித்திக்கும் தமிழில், தருகிறார் ஆசிரியர் தோழர் கண்ணதாசன்.

புயல் புகுந்த நாட்டைச் செப்பனிடும் தோழர்களுக்கு, தென்றல், மிக மிகத் தேவை—களைப்பு நீங்க, களிப்புமலர. மாற்றாரின் மன இருளை நீக்கவும், கொள்கையைக்கவ்வவரும் கொடுமையாளர்களைக் கண்டிக்கவும், சிலவேளைகளில், தென்றல், தீயாகவும் நேருவதுண்டு. அந்தத் தீ இருளில் கிடக்கும் மக்களை விடுவிக்கும், ஒளியாகப்பயன்படவேண்டும்.

தென்றல் வீசுகிறது! எரிச்சலை அடக்கி, இன்பம்தரும் வகையில், வேகமாகவீசட்டும் தென்றல்—நாட்டிலும், வீட்டிலும்.

தோழர் கண்ணதாசனின் முயற்சியை வாழ்த்துகிறோம்! வாழ்க, தென்றல்! வளர்க தமிழ் இன்பம்!!

விலை, அணா 2. முகவரி, 2, சண்முகமுதலி தெரு சென்னை 14.

3-ம் பக்கத் தொடர்ச்சி

திருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் மொத்த மக்கள் தொகையில் ஒரு மிகச் சிறிய பகுதியினருக்கே கிட்டியிருக்கும். அதனால் இந்தியாவில் இந்த பிரிட்டிஷ் ஆட்சியை மக்கள் நல ஆட்சியாகக் கருதவே இடமில்லை.

மக்கள் நல ஆட்சியில் ஆட்சிப் பொறுப்பு மக்கள் கையில் இருக்க வேண்டும். அதில்லாவிட்டால் ஒரு சர்வாதிகாரி ஆட்சியில் மக்கள் விரும்பும் எல்லா நலன்களும் வசதிகளும் செய்து தரப்படுகிறதென்றால், அதையும்தான் மக்கள் நல ஆட்சி என்று குறிப்பிட வேண்டிவரும். அதனால் மக்கள் நல ஆட்சியின் இன்றியமையாத இயல்பு அதில் மக்களே மன்னர்களாக, ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

அவ்வித ஆட்சியில் குடிமக்களில் ஒவ்வொருவனும் முக்கியமானவன், நல் வாழ்வு வாழ வேண்டியது ஒவ்வொருவருடைய பிறப்புரிமை என்ற அடிப்படையில் மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டில் எத்தனை கோடி மக்கள் இருந்தாலும், பணக்காரன், பிச்சைக்காரன், முதலாளி, தொழிலாளி என்ற பேதாபேதமின்றி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டியவர்கள் என்று கருதப்பட வேண்டும்.

அத்தனை பேர்களிலும், எவரும், எவ்வளவு கீழானவனும், நோய்வாய்ப்பட்ட நேரத்தில் நாதியற்றும், வேலைகிடைக்காத நேரத்தில் ஊதியமின்றியும், வயது முதிர்ந்த வேளையில் பிழைக்கவழியின்றியும், பசித்த நேரத்தில் புசிக்க உணவு இன்றியும், பெற்றபிள்ளையைப் பராமரிக்க சக்தியற்றும், இருக்க விடக்கூடாது. வறுமையின் காரணத்தால் எவராவது வாழ்க்கைக்குத் தேவையான எந்த ஒரு நலனையாவது பெற முடியாமற் போனாலும், அதற்கு அரசாங்கமே பொறுப்பாளியாக்கப்பட்டு அக்குறையை உடனடியாகத் தீர்க்க வழிதேடுவதுதான் மக்கள் நல ஆட்சியின் அடிப்படைத்தத்துவம்,

ஆணையினும் பெண்ணையினும் பிறந்த பொழுதிலிருந்து உயிர் பிரியும் வரை நியாயமான மனிதத் தேவை எதற்கும் கையேந்திப் பிச்சை எடுக்கும்படியான நிலையோ, வேறொரு தனி மனிதனின் தயவை நாடிப் பிழைக்க வேண்டிய அவசியமோ ஏற்படாமல், எல்லோரையும் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

இன்னும் சொல்லவேண்டுமானால் ஒருவன் பிறப்பதற்குமுன்னிருந்தே அரசாங்கத்தின் பொறுப்பு ஆரம்பமாகிறது. தாயின் வயிற்றில் கருத்தரித்த நேரமுதல்—வறுமையால் கருவையழிக்கத் தேடும் கொடுமை நேராமல்தடுக்க—கருத்தரித்துவிட்டேனே, இன்னும் ஒரு பிள்ளையா, இதையும் எப்படிக்காப்பாற்றுவேன் என்று கண் கலங்கித் தாயானவள் தவிப்பதைத் தவிர்க்க—அரசாங்கம் கருவிலிருக்கும் சிசுவுக்கும் பராமரிப்பு கொடுக்க வேண்டும். இதற்குக் காரணம் சிசுவின்மேல் அரசாங்கத்துக்கு ஏற்படும் இரக்கம் அல்ல, கற்பத்தடை அல்லது சிசுக் கொலை பாவம், அது கூடாது, என்ற 'புண்ணிய' நோக்கமட்டுமல்ல—சிசுவையும், அது கருத்தோன்றிய நேரத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டிய உரிமை இருப்பதால்.

ஆக, மக்கள் நல ஆட்சியில் கருவிலிருக்கும் சிசுவிலிருந்து கல்லறை செல்லும் வயோதிகர் வரை, தொட்டில் பருவமுதல், தொண்டு கிழப் பருவம் வரை ஒவ்வொரு பிரஜையும் உரிமையுடன் நல்வாழ்வு வாழ வழி வகுக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் அலுவல்கள் பற்றிய இந்தப் புதிய கருத்து திடீரென்று தோன்றியதல்ல.

மேனாடுகளில் ஒருகாலமிருந்தது, மக்களை வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து காப்பது மட்டும்தான் அரசாங்கத்தின் கடமை, அதற்குமேல் அரசாங்கம் செய்ய முயன்றால் அது தன் வரம்பைமீறிச் செல்வதாகும், மக்களுடையஉரிமைகளைப் பறிப்பதாகும் என்று கருதப்பட்டு வந்தகாலம். அரசாங்கம் ஒரு பெரிய போலிஸ்காரனைப் போல, நாட்டில்அமைதி,மக்களின்சொத்து, உயிர் முதலியவைகளைக் காப்பாற்றவே ஏற்பட்டதென மக்கள் கருதின காலம்.

பெற்றோர் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லையா? அதைப்பற்றி அரசாங்கத்துக்கு என்ன கவலை.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும்படி சட்டமியற்றலாமா? அரசாங்கத்துக்கு யார் இந்த அதிகாரம் கொடுத்தது?

பிள்ளையைப் பள்ளிக்கனுப்புவதோ பெற்றவனின் உரிமையும் பொறுப்பும். இந்தத் தனிமனிதனின் உரிமையிலே அரசாங்கம் எப்படித் தலையிடலாம்? வேலையின்றி பலர் அல்லற்படுகின்றனர், பட்டினியால் சாகின்றனர்—இதைக்கூட அரசாங்கம் கவனிக்கக்கூடாதா?

இதுதானா அரசாங்கத்தின்கவலை? பக்கத்திலுள்ளவர்கள் பிச்சை கொடுக்கட்டும். மத குருக்களோ மற்றவர்களோ வேண்டியதைச் செய்யட்டும். அரசாங்கம் என்ன, அன்னதான சத்திரமா? அரசாங்கம் தானம் செய்யப் புறப்பட்டால், பிறகு நாட்டில் ஏழைகள் எல்லோருமேவேலைசெய்யாமல் நாட்டையே சோம்பேறி மடமாகவல்லவா மாற்றி விடுவார்கள்?

இம்மாதிரி நொண்டிச்சமாதானங்களும், குருட்டுக் காரணங்களும், வரட்டு வாதங்களும் கொண்டுவரப்பட்டன, அரசாங்கத்துக்கு மக்கள் வாழ்வில் இருந்த அசிரத்தைக்கும் அக்கரையில்லாமைக்கும் ஆதாரமாக! (இன்னும்வரும்)

★

அங்கே, யோகம்!

மத்யபாரத் மாகாணத்தில் துவக்கப்பட்டுள்ள, நீபா ஆலை எனப்படும் காகித ஆலைக்கு, இந்திய சர்க்கார், 1,30,00,000 ரூபாய் கடன் உதவத் தீர்மானித்திருப்பதாக நிதி அமைச்சர், தேஷ்முக் நாகபுரியில் கூறியிருக்கிறார்.

இதே ஆலைக்கு, மத்ய சர்க்கார் ஏற்கனவே 97,00,000 ரூபாய் கடன் அளித்திருக்கிறது.

இந்தக் காகித ஆலையில் ஆண்டுக்கு 3,00,000 டன் காகிதம் உற்பத்தியாகுமாம்.



12. போலீஸ் விசாரணை

ஆறுமுகத்தின் உடலில் வியர்வைத் துளிகள் தோன்ற ஆரம்பித்தன. முகத்தில் லேசாக அவனையுமறியாமல் திகில் தோன்றியது. தன்னுடைய பயம்தெரியாமலிருக்கட்டும் என்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். சில விநாடிகள் அவனை உற்றுப் பார்த்த பின், தன் சம்பாஷணையை ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்.

"நீ தானேடா, புது டிரைவர்?"

"ஆமாங்க!"

"உன் பேரென்ன?"

"ஆறுமுகங்க!"

"ஆறுமுகமா......? வயசு......?"

"இருபத்தி நாலுங்க!"

"நீ எங்கே குடியிருக்கிறே?"

"உத்தமநாதபுரத்திலேங்க. எங்கப்பா கூட......" என்று ஆறுமுகம் தன் தந்தை காலம் முதல் இந்த உத்தமநாதர் குடும்பத்திற்குப் பழக்கம் என்று கூற நினைத்தான். ஆனால் இன்ஸ்பெக்டர் அதற்குள் "உஸ்......" என்று கூறிவிட்டு ஆங்கிலத்திலே ஏதோ பாஸ்கரிடம் கூறினார். பாஸ்கர் பதில் ஒன்றும் கூறவில்லை. அவர்கள் என்ன பேசிக் கொண்டார்களோ என்ற பயம்வேறு ஆறுமுகத்திற்கு அதிகமாகியது. இதற்குள் இன்ஸ்பெக்டர் மறுபடியும் தன் கேள்விகளை ஆரம்பித்தார்.

"நேற்று எத்தனை மணிக்கு பிள்ளைக்கு கார் ஓட்டிக் கொண்டு போனே?"

"ஆறு மணி இருக்குங்க."

"பிள்ளை மாத்திரம் தானே உன் கூட வந்தார்."

"ஆமாங்க......!"

"எங்கெங்கே பிள்ளை போனார்!"

"சேப்பாக்கம் லேபர் கமிஷனர் ஆபிசுக்குத் தான் நேராகப் போனாங்க."

"அப்புறம்......?"

"அப்புறமா இருட்டினதிற்குப் பிறகு ரொம்ப நாழி கழித்து பீச்சுக்குப் போனாங்க!"

"திரும்பி பங்களாவுக்கு எத்தனை மணிக்கு வந்தே?"

"பத்து, பத்தரை இருக்குங்க!!

"ஐயா நேரா படுக்கப் போயிட்டாரா. அல்லது வேறு எங்காவது போறதா சொன்னாரா?"

"நேரா மாடிக்குப்போனாருங்க!"

"அந்த நேரத்திலே இங்கே யாருடா இருந்தா......?"

"யாருமில்லிங்களே!"

"யாருமில்லியா?"

"இல்லிங்க........

'நல்லா, சுவனப்படுத்திச் சொல்லு. நீ யாரையுமே பார்க்கலையா?"

"..............."

"என்னடா, சும்மா அப்படி பார்க்கிறே? யாராவது இங்கே இருந்தாங்களா?"

"ஆறுமுகம் மறுபடியும் விழித்தபடி நின்றான். பாஸ்கர் அதற்குள் எழுந்து ஆறுமுகத்தின் அருகில் வந்தார். அவன் முதுகைத் தட்டி "பார்த்ததை அப்படியே சொல்லிடு, ஆறுமுகம்! விஷயம் எவ்வளவு பெரிசுன்னு தெரியுமில்லே!" என்றார்.

ஆறுமுகம் அசட்டுச் சிரிப்பு சிரித்து விட்டுத் தலையைக் கீழே போட்டுக் கொண்டான். மறுபடியும் இன்ஸ்பெக்டர் ஆரம்பித்தார்'

"ஏண்டா, யாராவது இராத்திரி இங்கே வந்தார்களா?"

"வந்தாங்க........"

"என்னடா, விஷயத்தைச் சொல்"

"நான் இந்த பங்களாவிலே குடும்ப டிரைவர். ஒவ்வொருத்தர் விஷயத்தையும் பகிரங்கமாக கூறலாமா?"

"சேச்சே, அதையெல்லாம் பார்க்கிறதுக்கு இதுவா நேரம் சும்மா, சொல்லுநடந்ததை" என்று இடைமறித்துக் கூறினார் பாஸ்கர்.

உடனே தைரியம் பெற்றவன் போல நிமிர்ந்தான், ஆறுமுகம்.

"அவர் மேலே ஒண்ணும் குற்றமிருக்காதுங்க." என்று கூறிவிட்டு புஷ்பாவைப் பார்த்தான். "யார் மேலே........" என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்.

ஆறுமுகம் புஷ்பாவைப் பார்த்த வண்ணமே "நேற்றிரவு நான் வீட்டுக்குப் போகும்போதுதான் அவர் வந்துகிட்டுருந்தாருங்க......" என்று இழுத்தான்.

புஷ்பா அப்படியே துள்ளி குதித்து எழுந்தாள்.

"யாரு......? நல்லமுத்துவா?" என்று கத்திக் கொண்டே ஆறுமுகத்தினருகில் வந்தாள்.

ஆறுமுகம் ஆம் என்று தலையை ஆட்டுவதற்குள்ளேயே இன்ஸ்பெக்டரும், பாஸ்கரும் "நல்லமுத்துவா......?" என்று ஏக

காலத்திலே கூறிக் கொண்டு எழுந்தனர்.

"ஆமாங்க... அவனைத் தவிர்த்து வேறு யாருமில்லிங்கோ" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே பரிதாபமாகப் புஷ்பாவைப் பார்த்தான் ஆறுமுகம். 'நல்லமுத்து' என்றவுடன் அவள் அப்படியே துவண்டு விழுந்துவிடுவாள் என்று எண்ணினான். ஆனால் அவள் அவ்வளவு ஏமாளியாக இல்லை.

"நல்லமுத்துவா...? அவர் நேற்றிரவு என்னை வந்து பார்க்கவேயில்லையே" என்றாள்.

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

பாஸ்கரைத் தள்ளிக்கொண்டு இன்ஸ்பெக்டர் ஆதிமூலம், ஆறுமுகத்தினருகில் வந்தார்.

"நீ உங்கய்யாவை அழைத்துக் கொண்டு வரும்போதே அவன் இங்கிருந்தானா?"

ஆறுமுகம் ஒரு வினாடி யோசித்தான்.

"இல்லை, சார். நான் ஐயாவை கொண்டுவந்து விட்டுட்டு திரும்பப் போகும்போது அவர் பங்களாவிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்!" என்றான்.

"உன்னோடு என்ன பேசினான்?"

"ஒன்றுமில்லிங்க........" என்று இழுத்தவண்ணம் புஷ்பாவைப் பார்த்தான். புஷ்பா ஆறுமுகத்தை அழுத கண்களோடு பார்த்தபடி இருந்தாள்.

"பேசாமே இருக்கியா...என்னடா உளர்றே. நிஜத்தைக்கூறு!" என்று அதட்டிய குரலில் ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம்.

ஆறுமுகம் தலையைக் குனிந்தபடியே "இல்லிங்க...கார்ஷெட்டை திறந்து வைத்திருக்கியாவென்று கேட்டாருங்க. அவ்வளவுதான்!"

ஆதிமூலம் ஒன்றும் புரியாமல் புஷ்பாவைப் பார்த்தார்.

புஷ்பா "ஆமாம்... அவரை கார் ஷெட்டுக்குத்தான் வரச் சொல்லியிருந்தேன்" என்றாள்.

ஆதிமூலம் உடனே விஷயத்தைப் புரிந்துகொண்டார்.

"சரி, சரி. அதனால் ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு ஆறுமுகத்தைப் பார்த்து "வேறு என்னடா, சொன்னார், அவர்?" என்றார், ஆதிமூலம் மறுபடியும்.

"வேறு ஒன்றும் சொல்லலிங்க, நானும் ஒன்றும் கேட்கலீங்க. பேசாமல் பங்களா கேட்டை சாத்திக்கொண்டு போயிட்டேனுங்க. நான் எப்படிங்க, என்ன பேசறதுங்க......!"

அவன் கூறியதை ஆமோதிப்பது போல் ஆதிமூலம் தலையை ஆட்டிய வண்ணம் பாஸ்கரைப் பார்த்தார்.

புஷ்பா, அதற்குள் "நல்லமுத்துவை நான் சந்திக்கவேயில்லையே!" என்று நடுங்கிய குரலில் கூறினாள்.

"உன்னை ஏன், அவன் பார்க்கணும்......? அவனுக்கு ஆகவேண்டிய காரியம், நம்ப அப்பாவின் உடலைப் பிணமாக்குவதுதான். அதற்கு அவன் போட்ட திட்டங்களில் நீ ஒரு கருவி!........சரியான பைத்தியமின்டி, நீ! அந்தப் பரதேசிப் பசங்களோடேயா, சிநேகிதம் வைத்திருந்தே?" என்று கத்தினார் பாஸ்கர்.

இன்ஸ்பெக்டரும், ஆறுமுகமும் பேசாமல் இந்த வாக்குவாதத்தை கேட்டபடியே நின்று கொண்டிருந்தனர். பாஸ்கரின் அதட்டல் புஷ்பாவின் கண்களில் நீரைக் கொட்டச் செய்தது.

"ஐயோ, அண்ணா! இந்த மாதிரியெல்லாம் வருமென்று நான் நினைக்கலையே..." என்று கூறிக்கொண்டே நழுவிவிழுந்த தாவணியால் கண்ணீரைத் துடைத்த வண்ணம் மாடிக்கு ஓடினாள், அவள்.

பாஸ்கர் பேசாமல் அவளைப் பார்த்து முறைத்தவண்ணம் நின்று கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் எழுந்தார். "நீங்க இனிமேல் பயப்படவேண்டாம், சார்! முதலில் அந்த நல்லமுத்துவைப் பிடிச்சு உதைச்சா, தன்னாலே எல்லாம் வெளியாயிடும். புஷ்பாவிடம் கோபப்படாதீர்கள். அவளை சமாதானமா வைத்திருங்கள். நான் சீக்கிரமாகப் போகணும். குற்றவாளி அதுக்குள்ளே தப்பிக்க வழி செய்தாலும் செய்திருப்பான்"

"ஆமாம், சார்! கொஞ்சம் சுறுசுறுப்பா கவனிங்க. எப்படி, எப்படிச் செய்யணுமோ அப்படிக் காரியங்களை பார்த்துச் செய்யுங்கோ. நம்ப லாயர் கிருஷ்ணசாமி இருக்காரு. எப்போ வேணுமென்றாலும் உங்களுக்கு உதவி செய்வார்"

"சரிங்க, நான் வருகிறேன்"

"ஆமாம்......அடிக்கடி எனக்கு போன் செய்து விஷயத்தை அவ்வப்போது கூறிக்கொண்டிருங்கோ!"

"சரி, சார்!"

சில வினாடிகளில் வெளியே இரண்டு போலிஸ் வான்களும் 'விர்' என்ற சப்தத்துடன் புறப்பட்டன.

பாஸ்கர் அப்படியே விழித்தபடி சோபாவில் அமர்ந்தார்.

ஆறுமுகம் தலையைக் குனிந்த வண்ணமே வெளியே வந்தான். வராந்தாவில் குப்பன் அவலோடு பேச ஆரம்பித்தான்.

"நல்லமுத்து நம்ப பங்களாவுக்கு வந்ததை, நீ ஏன் காலையிலேயே சொல்லலே, ஆறுமுகம்!"

"அவர், நம்ப ஐயாவுக்கு ஏதாவது செய்வாரென்று நான் துளி கூட நினைக்கலையே, குப்பா!"

"சரியாப் போச்சு, போ. அந்த ஆசாமிதானே, நம்பமில்லிலே இருக்கிற ஆள்களையெல்லாம் தூண்டிவிட்டு, கெட்டவழியிலே இழுத்துவிடறான். அவனைப் போயா நல்லவனென்று நினைத்தே...?"

"எனக்கென்னப்பா, தெரியும். என்னமோ, புஷ்பா அம்மாவோடு சிநேகிதமா இருக்காரே, அதனாலே அவர் நல்லவருன்னுதான் நினைச்சேன்!"

"அவன் நல்லவனானாலும் கெட்டவனானாலும் சரி. இப்போ நம்ப ஐயாவுக்கு ஒன்னும் ஆபத்து இல்லாம இருந்தா, சரிதான்" என்று கூறிக்கொண்டே தோட்டத்தின் பக்கம் போனான் குப்பன்.

ஆறுமுகம் அப்படியே வராந்தாவில் ஏதோ யோசனை செய்தபடி நின்றான். பிறகு திடீரென்று மாடிக்கு ஏறிச் சென்றான்.

இப்பொழுது அவன் தைரியமாக மாடிக்குச் செல்லலாம்! ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டே புஷ்பாவின் அறைக்கு அருகில் வந்து நின்றான்.

கதவு சாத்தியிருந்தது. உள்ளே புஷ்பாவின் விம்மல் சப்தம் கேட்ட வண்ணமிருந்தது.

கதவைத் தட்டி அவளோடு சில வினாடிகள் பேசினால் என்ன?

அவளுடைய அந்தரங்க விஷயத்தை எல்லோருமறியக் கூற வேண்டி நேரிட்டதற்காக வருத்தம் தெரிவித்தால் என்ன?

சில நிமிஷங்கள் அப்படியே வெளியே நின்றுகொண்டு யோசித்தான், ஆறுமுகம்.

இப்பொழுது அவனாக ஏன் அவளிடம் சென்று பேசவேணும்?

அவள் படித்தவள்! பணக்காரி!! ஏதாவது கேட்டு எப்படியாவது அவனிடமிருந்து உண்மையை வாங்கிவிட்டால்......!

இந்த விளைவை நினைத்தவுடனேயே ஆறுமுகத்தின் மனதில் திகில் பிறந்தது. ஆம்! அவர்களாக யாரும் இந்த விஷயத்தைப்பற்றி பேசினாலொழிய அவனாகச் சென்று யாரிடமும் பிள்ளையின் மறைவைக் குறித்துப் பேசக்கூடாது. அது தான் பத்திரமான பாதை. இதை விட்டுவிட்டு, அதிக விசுவாசமுள்ள டிரைவர்மாதிரி நடிக்க ஆரம்பித்தால், எல்லாம் கவிழ்ந்துவிடும். ஆகவே, பேசாமல் வந்தவழியே மறுபடியும் திரும்பவந்து, கார் ஷெட்டிற்குப் போய் படுத்துக் கொண்டான்.

மேற்கொண்டு என்னென்ன நடக்குமோ, யார் யார் வந்து எப்படி எப்படிக் கேள்விகள் கேட்பார்களோ என்று யோசனை அதிகமாகிக்கொண்டே இருந்தது ஆறுமுகத்திற்கு.

மாலை ஆறுமணிவரை இந்தக் குழப்பத்தில் ஆழ்ந்தவண்ணம் படுத்துக் கிடந்தான், ஆறுமுகம்.

"ஆறுமுகம்! ஆறுமுகம்!!" என்று யாரோ கூப்பிடுவதுபோல கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"என்னப்பா, இப்படித் தூக்கம்! பத்து நிமிஷமாக் கூப்பிடுறேன் விழலையா?" என்று கூறிக் கொண்டே குப்பன் வந்தான்.

ஹூம்........." என்று முனகிய வண்ணம் எழுந்து நின்றான்,

"என்னப்பா, கண்ணெல்லாம் இப்படிச் சிவந்துவிட்டது. மத்தியானம்கூட சரியா சாப்பிடலே. உடம்புக்கு என்னப்பா......?"

"ஒண்ணுமில்லே......" என்று முனகியவண்ணம் எழுந்து புஷ்கோட்டைப் போட்டுக்கொண்டான்.

"சரி, உன்னை, சின்ன அம்மா கூப்பிட்டாங்க, போய்க் கேளு!" என்று கூறிவிட்டுப் போனான் குப்பன். ஆறுமுகத்திற்குப் புஷ்பாவின் அழைப்பு இன்னும் திகிலைக் கொடுத்தது. குப்பன் போன திக்கையே சில வினாடிகள் பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

"சரி, இந்தச் சந்தர்ப்பமும் அவன் எதிர்பார்த்ததுதானே!"

ஷெட்டைச் சாத்திப் பூட்டிக் கொண்டு பங்களாவிற்குள் போனான். மத்தியானம் இருந்த மாதிரியே புஷ்பாவின் அறை சாத்தியபடி இருந்தது.

வெளியே நின்றபடியே லேசாக இரண்டு தடவை தட்டினான்.

"யாரது......?" என்ற மெல்லிய குரல் கேட்டது.

"ஆறுமுகங்க......"

"ஆறுமுகமா! வா ஆறுமுகம்!" என்ற வார்த்தைகளுடன் கதவு திறக்கப்பட்டது. அழுது, கண்கள் சிவந்து, தலை கலைந்து ஆடைகள் உருக்குலைந்து காட்சியளித்தாள், புஷ்பா.

அவளுடைய உருக்குலைந்த தோற்றத்தைக் காணப் பயந்த ஆறுமுகம், தலையைக் குனிந்த வண்ணம் உள்ளே சென்று நின்றான்.

பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்த வண்ணமே, "ஆறுமுகம் ......" என்றாள் புஷ்பா.

"அம்மா......!" என்றான், ஆறுமுகம்.

"இன்று பகல் நீ கூறியதெல்லாம் உண்மைதானா? நிஜமாலும் நல்ல முத்து நேற்றிரவு இங்கு வந்தாரா?"

ஆறுமுகம் திடுக்கிட்டுத் தலையைத் தூக்கினான்.

புஷ்பா அவனைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்னம்மா, அப்படி கேட்கிறீங்க. நீங்க, ஷெட்டிலே இருக்கிங்களா, என்று கூட கேட்டாரம்மா. நான்தான், நீங்களுமிலேதான் இருக்கிங்க என்று சொல்லிவிட்டுப் போனேன்!"

"அப்படியா...? பின் ஏன் அவர் என்னைவந்து பார்க்கலை? நான் கூடப் பதினொரு மணிக்கு விழித்துக்கொண்டு கார் ஷெட்டிற்கு ஓடிப்போய் பார்த்தேனே. அங்கே அவரில்லையே?"

"என்னமோ, தெரியலையே! நீங்க பத்து மணிக்கெல்லாமே வரச் சொன்னிங்களே. நான் அவர் முதலிலேயே வந்துவிட்டு, எங்களைப் பார்த்ததும் வெளியே போயிட்டு, மறுபடியும் வாரார்னு நினைத்தேன், அம்மா. அதற்கேற்றாற்போல உங்க அறையில் விளக்குக்கூட எரிந்ததே, அம்மா!"

"ஆமாம், அதுதான், பண்ணின தப்பு. ஒன்பது மணிதானே ஆகுதென்று, படுத்தவள் எப்படியோ, தூங்கிவிட்டேன். விழித்துப்பார்த்தபொழுது பதினொரு மணியாகிவிட்டது! பிறகுதான் ஷெட்டுக்குப் போனேன். அங்கு அவரைக் காணோம். ஆகவே அவர் வந்திருக்கவே மாட்டார்னு நினைத்தேன். இப்போ, எனக்குத் தெரியாமே அவர் இங்கு வந்து என்னென்னமோ, பண்ணிருக்கார் என்று தெரிகிறது!"

"சேச்சே, அவர் ஒண்ணும் செய்திருக்க மாட்டாரம்மா. அவர் ரொம்ப நல்லவரம்மா!"

'ஹிம்...என்ன, நல்லவர். புத்தி கெட்டவர். இப்படி என்னையே ஏமாற்றி, எங்கப்பாவையே கொன்னுட்டானே, பாவி!" என்று கோபமாகக் கூறி எழுந்தாள் புஷ்பா.

ஆறுமுகம் திடுக்கிட்டவன்போல பின்னால் நகர்ந்தான்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.